JL
J684m211, N27
N28.1.11
159612

Registered No. M. 2260.

பிரபவ ௵ · மாசி ௴
மலர் I · இதழ் 11

177

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை.

## THE CARDAMOM PLANTER,

THE ORGAN of The Travancore Cardamom Planters' Association.

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1928
MADRAS

## பொருள் அடக்கம்.

தொடர் நிர.


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | |
| 2. | கைத் தொழில் | 398 |
| 3. | திவான் முன்னுரை | 406 |
| 4. | கிராமங்கள் | 416 |
| 5. | ஆசிரியர் குறிப்புகள் | 437 |
| 6. | ஆசிரியர் திரட்டு | 441 |
| 7. | சங்கக் குறிப்பு | 442 |
| 8. | வர்த்தமானக் குறிப்புகள் | 422 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்குச் சந்தா | ரூ. | 2—0- |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8- |

குறிப்பு:—

வியாசம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாயும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு வியாசதாரர்களே பொறுப்புதாரி.


# "ஏல விவசாயி". 177

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

| மலர் I | உத்தமபாளையம். பிரபவ௵ மாசி௴ 1928௵ பிப்ரவரி—மார்ச்சு௴ | இதழ் II |
|---|---|---|


### கடவுள் வணக்கம்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடி வெம் புலி வாயையும்
கட்டலா மொரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
ஜலமே நடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாம
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
159612

# கைத் தொழில்.

மக்கள் வாழ்க்கையில் நாகரிகம் தோன்றியதன் பயனாய் உலகில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவை ஏற்பட்டன. விவசாயம் மாத்திரமே மேலோங்கி நின்ற ஒரு காலமுண்டு. அதுவே மக்களின் நாகரிகத்தின் ஆரம்ப நிலையென்பர் ஆராய்ச்சியாளர். பின்னர் கைத்தொழிலும், நாகரிகமும் வளர்ச்சி யடைந்தன. இன்றைய உலக நிலையை நோக்கு மிடத்து, இதைக் கைத்தொழில் யுகம் என்று குறிப்பிடவே நேரிதாம். ஏனெனில் உலகில் இன்று எந்நாட்டில் கைத்தொழில் மேலோங்கி நிற்கிறதோ அந் நாடே செல்வமும், சீரும் பெற்றுச் செழித்திருக்கிறது. செல்வத்தை யீட்டுவதற்கு வர்த்தகமே முக்கிய சாதனம். அவ் வர்த்தக வளர்ச்சி இன்று கைத்தொழிலையே பொறுத்திருக்கிறது. விவசாயத்தையே முக்கியமாகக் கொண்ட நாட்டைவிட கைத்தொழிலையே முக்கியமாகக் கொண்ட நாடு மேலோங்கி நிற்கிறது. விவசாயத்திற்குப் போதிய வசதி யில்லா இங்கிலாந்து போன்ற சில சிறு நாடுகள் உலகில் விவசாயத்திற்குப் பெயர்போன பல பெரிய நாடுகளைவிட சிறந்து விளங்குவதற்கு அந் நாடுகளில் வளர்ந்துள்ள கைத்தொழிலே காரணமாகும். பலவித கைத்தொழில்களுக்கும் மூலப் பொருள்களை விவசாயத்தாலேயே விளைவிக்க வேண்டி யிருக்கிறது. எனவே விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும் ஒருங்கே முதன்மை யடைந்த ஒரு நாடு மற்றெல்லா நாடுகளைவிட உயர்வடையுமென்பது திண்ணம். இது காலை இவ் விதம் இரு துறைகளிலும் வளர்ச்சி யுற்று வருவது அமெரிக்கா நாடென்பதி லையமில்லை. உலகில் அமெரிக்காவுக்குள்ள தனிச்



சிறப்பு வேறென் நாட்டுக்கு மில்லை. தங் கைத்தொழில் வளர்ச்சியால் பெருஞ் செல்வத்தை யீட்டிக் கோடீஸ்வரர்களெனப் பெயர் பெற்ற ராக் பெல்லர், ஹென்றி போர்டு முதலியோர் அமெரிக்கா வாசிகளன்றோ? ஆகவே, விவசாயத்திலும், கைத்தொழிலும் ஒருங்கே முதன்மை யடையும் நாடே இனி உலகில் தலை தூக்கி நிற்கக் கூடுமென்பதை ஒவ்வொருவரும் சிந்தித் துணர வேண்டும்.

அரசியல் அதிகாரத்தால் ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி யாளுவதே பெரும் பாலாருக்குத் தென்படும். ஒரு நாடு தந் நாட்டுப் பொருள்களைப் பல நாடுகளிற் பரவச் செய்து, அப் பல நாடுகளின் செல்வத்தையுங் கவரு முகத்தான் அந் நாடுகளனைத்தையும் அடக்கி யாளும் இரகசியத்தை அநேகர் அறிந்திருக்க மாட்டார்கள். உதாரணமாக, நம் மிந்தியாவைச் சிறப்பாக ஆங்கிலேயர்களே ஆண்டு வருகிறார்களாயினும், வியாபார முகத்தால் எவ் வெந்நாட்டுப் பொருள்கள் மலிந்து நந் நாட்டிற் பரவுகின்றனவோ, அவ்வந் நாட்டிற்கு நந் நாடு அடிமையாகி நிற்கிற தென்பதற்குத் தடையென்ன? இம் முறையிற் பார்க்கு மிடத்து அரசியல் அடிமை வாழ்க்கையைவிட வியாபாரத் துறையில் அடைந்துள்ள அடிமை வாழ்க்கையே மிகவும் கொடியதென்பது விளங்கலாம். ஏனெனில், அரசியல் துறையில் வெளி நாட்டுக்குச் செல்லும் நம் பணத்தைவிட, வியாபாரத்துறையில் வெளி நாடுகளை நாடிச் செல்லும் நம் பணமே மிக மிகப் பெரிதாம். எனவே ஒரு நாட்டின் மேன்மை பொதுவாக அந் நாட்டின் விவசாயம், கைத்தொழில், வாணிபம் என்ற முத்துறைகளையே சார்ந்திருக்கிறதெனினும், இக் காலத்தில் ஒரு நாட்டின் மேன்மை சிறப்பாக அந் நாட்டுக் கைத்தொழிலையே சார்ந்திருக்கிறதென்று கருத வேண்டி யிருக்கிறது. நாகரிகம் வளர்ந்து வருவதற்கேற்ப மக்களின் சுகபோக நுகர்ச்சியின் விருப்பமும் வளர்ந்து வருகிறது. அவ் விருப்பத்தைச் சாதிக்கப் பலவித செயற்கையின்பச் சாதனங்கள் வேண்டப் படுகின்றன. அதை முன்னிட்டுத் தோன்றியனவே தற்காலத்திய கைத்தொழிற் பொருள்கள்

பலவுமாம். இயற்கையில் எழும்பி வரும் மனித உணர்ச்சியை மடக்கி அவ் வகையில் நாட்டைக் காக்க முயலுவதினும் அவ்வுணர்ச்சி வழி பற்றிச் சென்று அதை நமக்குச் சாதக மாக்கிக் கொள்ளுவதே அறிவுடைமையும் அநுகூலமுமாம்.

## நமது சிந்தனை

மேலே கூறிய கருத்துக்களை மனத்தி லிருத்தி இந்திய மாதாவின் அருந்தவச் செல்வர்களாகிய நாம் நந் நாட்டினுடையவும், நம்முடையவும் நிலைமையினைச் சிந்திக்க வேண்டுவ தவசியம், பண்டைக் காலத்தில் பொன் விளையும் நந் நாடென உலகத்தாரால் புகழப் பெற்ற நம் பாரத நாடு இன்று மிக மிக ஏழ்மை நிலையிலிருக்கிறது. அதற்குக் காரணம்? அக் காலத்தில் நந் நாட்டுப் பொருள்கள் பிற நாடுகளுக்குச் சென்றன; அதனால் பிற நாட்டுச் செல்வம் நந் நாட்டை வந்தடைந்தன வன்றி இந் நாட்டுச் செல்வம் வெளியேறவில்லை. இக் காலத்திலோ வென்றால் நமது தின வாழ்க்கைக்கு வேண்டிய பல பொருள்களும் அயல் நாடுகளிலிருந்தே நாம் வரப் பெறுததால், நமது செல்வம் நாளுக்கு நாள் அயல் நாடுகளையே போய்ச் சேருகிறது; அதனால் நாம் வறுமைக்குள்ளானோம். இந் நிலைமை மாறினாலன்றி ஒருபோதும் நந் நாடு மேன்மை யடைய முடியாது. இது காலை நமது நாட்டில் தேச பக்தி யெங்கும் பரவி வருகிறது. பாரத மக்கள் தேசிய உணர்ச்சி பெற்றுப் பல வழிகளில் நாட்டின் நலத்தை நாடத் தலைப்பட்டுள்ளார்கள். ஆகவே இந்திய மக்கள் ஒவ்வொருவரும் உண்மையில் நாட்டின் நலத்தைச் சாதிக்கக் கருதினால் இக் காலத்திற்கேற்ப முதற்கண் நந் நாட்டுக் கைத்தொழில்களை வளர்க்கப் பாடுபட வேண்டும். நம்மில் சிலர், அயல் நாட்டாரைப் போல் தொழிலில் அனுபவமும், திறமையும் நம்மவருக்கேற்படுவதில்லை யென்று கருதுகின்றனர். அஃது பெரிதுந் தவறாம்.



## பண்டைப் பெருமை

இக் காலத்தில் எத்தனைவித நவீன கைத்தொழில்கள் உலகில் தோன்றியுள்ளனவோ அவை யனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நந் நாட்டில் தோன்றி யிருக்கின்றன. மிகவும் பழமையான நாகரிகத்திற்குப் பெயர்போன எகிப்து, பாபிலோனியா, ரோம ராஜ்யங்கள் உலகில் உருப்படுவதிற்கு முன்னரே நம் மிந்திய நாடு நாகரிகத்திற் சிறந்து, பல கலைகளால் நிறைந்து, அநேக அற்புதத் தொழில்களில் மிகுந்து உலகில் தலை சிறந்து விளங்கிய தென்பதைப் பலரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். நமது நாட்டின் பண்டைச் சிறப்பினை யறிய விரும்புபவர் முதற் கண் நாட்டிலுள்ள பல புராதன ஸ்தலங்களை நேரிற் சென்று காண வேண்டும். சரித்திராசிரியர், ஸ்தல பரிசோதகர், சாசனப்பரிசோதகர், பூதத்துவ ஆராய்ச்சியாளர் முதலியோரின் நூல்களைப் படிக்க வேண்டும். நமது புராதன நூல்களாகிய வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியவற்றை ஆராய வேண்டும். அப் பொழுதே உண்மை விளங்கும். சிற்பக் கலைகளைப் பற்றியும், இயந்திர நிர்மாணங்களைப் பற்றியும், மற்றும் பலவித கைத்தொழில்களைப் பற்றியும் நம் முதாதையர் எழுதியுள்ள நூல்கள் பல காணப் படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டுள்ள அந் நூல்களில் சிற்ப வேலை, சித்திர வேலை, இரசாயன முறை, இயந்திர நிர்மாணம், பூகர்ப்பவாராய்ச்சி, பூத தத்துவம், வான சாஸ்திரம், வாகன நிர்மாணம், மின்சார வித்தை முதலியன கூறப்பட்டிருப்பதைக் காணுமிடத்து நம் முன்னோரின் அறிவாராய்ச்சியின் வன்மையும், தொழிற் பழக்கமும் எத் துணை மேன்மை யுற்றிருக்க வேண்டு மென்பது வெளியாகிறது. உலகில் எந்தத் தேசமுந் தோன்றுவதற்கு முன்னரே பாரத தேசமானது பலவித கலைகளிலும் தத்துவ ஆராய்ச்சியிலும், அரசியல் முறையிலும், கைத்தொழில்களிலும், மக்களின் நல் வாழ்க்கைக்கு இன்றி யமையாத பிற துறைகளிலும் நாகரிகம் பெற்றுச் சிறந்திருந்தது என்று ஆராய்ச்சியாளராகிய

மூர்சே, ஹீரன் முதலிய மேல் நாட்டுப் பண்டிதர்கள் கூறுகின்றனர். தாவர்னியர் என்ற பண்டிதர் நந் நாட்டில் நெசவுத்தொழில் அடைந்திருந்த மேன்மையைப் பலவாறு புகழ்ந்திருப்பதோடு, நந் நாட்டினின்றும் பிற நாடுகளுக்கு டாக்கா மஸ்லின் முதலிய மெல்லிய துணிகளும், பலவித பட்டு வஸ்திரங்களும், சித்திர வேலைகளோடமைந்த ஆடைகளும் ஏராளமாக அனுப்பப்பட்டு வந்தனவென்று கூறுகிறார். "உலோக வேலை, சிற்ப வேலை, சித்திரம் வரைதல், வர்ணந் தீட்டுதல், வாசனைப் பொருள்களைத் தயாரித்தல் முதலிய தொழில்களில் இந்தியர் மேன்மையுற்றிருந்தார்கள்" என்று வெபர் என்ற மற்றொரு பண்டிதர் எழுதுகிறார்.

நெசவுத் தொழிலை முதன் முதலில் இந்தியரிடத்திலிருந்தே ஐரோப்பியர் கற்றுக் கொண்டாரென்றும், இந்திய நெசவுக் கருவிகளைப் போன்ற கருவிகளாலேயே நெசவுத் தொழிலை அவர்கள் செய்ய ஆரம்பித்தார்களென்றும் நடுவு நிலைமை பூண்டு ஆராய்ச்சி செய்த மேல் நாட்டுப் பண்டிதரொருவர் கூறுகிறார்.

பொன்னாலும், பிற உலோகங்களாலும் அணிகளும் பிற பணிகளும் இயற்றுவதில் முதன்மையானவர் இற்றைக்கும் இந்தியரே. இரும்பையுருக்கிப் பல கருவிகள் செய்யும் தொழில் மேல் நாடுகளில் சில வருடங்களுக்கு முன்னரே தொடங்கப்பட்டது. இந்தியாவிலோவெனில் இரும்புத் தொழில் அநாதி காலமாய் நடைபெற்று வருகிறது. எஃகுக் கத்திகளுக்குப் பெயர் போனதும் இந்தியாவே. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருக்கிச் செய்யப்பட்டு டில்லிக் கருகாமையில் நிறுத்தப் பெற்றுள்ள இரும்பாலாகிய உலோகத்தூண் இன்றும் தன் புதுமையிலும், வனப்பிலுங் குன்றிருக்குஞ் சிறப்பை என்னென்று புகழ்வது! ஐரோப்பிய மேதாவிகள் அநேகர் அதைக் கண்ணுற்று நம் முன்னோரின் உலோகத் தொழில் வன்மையை வாயார வாழ்த்துகின்றனர்.



முற் காலத்தேயன்றி இக்காலத்தும் வேறெந் நாட்டிலுங் காண முடியாத சிறப்புற்ற சிற்பத் தொழில் நந்நாட்டுக்கே உரியதாய்க் காணப்படுவதை பன்னாட்டாரும் பாராட்டுகிறார்கள். விசித்திர வேலைப் பாடமைந்த வானமளாவிய கூட கோபுரங்களோடு கூடிய கோயில்களையும், கோட்டைக் கொத்தளங்களையும், உன்னத மாளிகைகளையும் நந் நாட்டிற்போல் வேறெந்நாட்டிற் காண முடியும்? எல்லோரா, கார்லி, அஜந்தா முதலிய மலைக்குடைவுகளும், தாஜ் மஹால், ஜும்மாமசீது, திருமலை நாயக்கர் மஹால் போன்ற மாபெரும் மாளிகைகளும், திருவரங்கம், மதுரை போன்ற மகோன்னத நகர நிர்மாணங்களும், ஸ்ரீரங்கம், ஸ்ரீ சைலம், சோமநாதபுரம், மகாபலிபுரம், தக்ஷசீலம் முதலிய ஸ்தலங்களிலுள்ள பிரம்மாண்டமான கோயில்களும், பிற அமைப்புகளும், நாடெங்கும் மலிந்துள்ள பௌத்தர்களின் ஸ்தூபிகளும், டில்லிக் கருகாமையிலும் செஞ்சியிலு முள்ளதைப் போன்ற பற்பல நிலக் கோட்டைகளும், மலைக் கோட்டைகளும் இவை போன்ற மற்றும் பல ஸ்தாபனங்களும் நந்நாட்டுச் சிற்பத் தொழிலின் பண்டைப் பெருமையினை உலகத்திற்கு விளக்கிக் காட்டிக் கொண்டிருக்கின்றன. டில்லியில் தந்தத்தினால் பல அற்புத வேலைகள் செய்யப்பட்டன. விசாகப் பட்டணத்தில் உலோகத்தால் வெகு அருமையான பொம்மைகள் செய்யப்பட்டன. ஜெயப்பூர், பஞ்சாப், காஷ்மீரம் முதலிய விடங்களில் செய்யப்பட்ட பித்தளை உலோக வேலைகள் புகழ்தற்குரியனவாம்.

பொன்வேலை, கொல்வேலை, தச்சுவேலை, கன்னாரவேலை, கல்வேலை, மண்வேலை, நெசவுவேலை முதலியவற்றில் சிறப்பாக ஒவ்வொரு தொழிலையும் செய்வதற்கு ஒவ்வொரு சமூகம் நம்மில் வெகு புராதன காலமாக ஏற்பட்டிருக்கிறது. அதைக்கவனிக்குமிடத்தும் நமது கைத் தொழில்களின் பழமை இனிது புலனாகலாம். இக்காலத்தில் மேல் நாட்டாரே கண்டு பிடித்தா

ரென்று மெச்சி நச்சிக் கொள்ளப்படும். ஆகாய விமானம் போன்ற நிர்மாணங்களையும் நம் முன்னோர் கண்டிருந்தாரென்பதற்கேற்ற ஆதாரங்களுள்ளன. இராமாயணத்திற் கூறப்பட்டுள்ள புஷ்பக விமானமும், சீவக சிந்தாமணியிற் செப்பியுள்ள மயில் பொறியும் அதற்குத்தக்க உதாரணங்களல்லவா? நமது வேதத்தில் பலவித இயந்திர நிர்மாணங்களைப் பற்றியும், மின்சார விசைகளைப் பற்றியும், வானரதம், தூர சிரவணம் முதலிய சாதன அமைப்புகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

எகிப்து, கிரீஸ், ஆபிரிக்கா, அரேபியா, அமெரிக்கா முதலிய நாடுகளோடு நம் முன்னோர் கப்பல் மூலமாய்க் கடல் கடந்து சென்று வாணிபஞ் செய்திருக்கிறார்களென்றால் கப்பல் கட்டுந் தொழிலை நம்மவர் அறியாதிருந்திருப்பார்களா? அலெக் சாந்தர் போன்ற அரசர் சிலர் தங்கள் தேசத்திற்காக நந் தேசத்தில் பல மரக் கலங்களை கட்டுவித்தார்களென்று ஆராய்ச்சியாளர் அறைகின்றனர். தமிழ்ச் சங்க நூல்களிலும் கப்பற்றொழிலைப் பற்றியும், கடல் யாத்திரையைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தும் எந்நாட்டிலுங் காண முடியாத பல்வேறு வகைப்பட்ட இன்சைக் கருவிகளுக்குப் பெயர் போனதும் இந்தியாவேயாம். பல திறப்பட்ட போர் கருவிகளையியற்றுவதிலும் நம் முன்னோர் ஆற்றல் பெற்றிருந்தனர். எய்யுங் கருவி, அரியுங்கருவி, சுடுங்கருவி, உடற்கவசம் முதலியவனைத்தும் உலகில் முன்னே கண்டார் நம் முன்னோர். "சதக்னி" யென்ற பெயரால் பலவித பீரங்கிகள் முற்காலத்தில் வழங்கி வந்தனவென்று வடமொழி நூல்கள் வர்ணிக்கின்றன. வான சாஸ்திர ஆராய்ச்சிக்கேற்ற பல இயந்திரங்களையும் நம் பண்டைக் கைத்தொழிலாளர் சமைத்திருக்கும் நேர்மையினை இன்னுங் காசியின் கண்ணுள்ள சோதிட ஆராய்ச்சிக் காட்சிச் சாலையிற் காணலாமெனப் படுகிறது. தமிழ்ச் சங்கப் பலகையைப் பற்றியும், அதன் அற்புதங்களைப் பற்றியும் யாரே அறியாதார்?



சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந் நாட்டுக்கு வந்த சீன யாத்திரிகராகிய யுவான் சியாங் என்பவர் தமது யாத்திரையில் இந்தியாவில் கண்ட காட்சிகளை வெகு அழகாக வர்ணித்தெழுதியுள்ளார். அதில், அக் காலத்தில் நந்நாட்டில் சிறப்புற்றிருந்த பல நகரங்களையும், ராஜ்யங்களையுங் குறிப்பிட்டு அவற்றின் அமைப்புகளை விவரிக்கிறார். அவர் கூறுவதைக் கொண்டு அக் காலத்தில் முக்கியமான நகரங்களில் நடைபெற்றுவந்த கைத்தொழில் வியாபாரங்களையும், ஆங்கிருந்த செல்வச் சிறப்பையும், நாடெங்கும் காணப்பட்ட சிற்பக் காட்சிகளையும் உருவகப்படுத்தி நோக்குமிடத்து நம்முடல் சிலிர்க்கிறது. அத்துணைப் பெருமை தங்கிய நிர்மாணங்களும், கைத்தொழில் வளங்களும் மலிந்து உலகில் சிறந்து விளங்கிய நம் பாரதநாடு இன்று எந்நிலையிலிருக்கிறதென்பதை இனி ஆராய்வோம்.

என். வேங்கடரமணன்.

# ஸ்ரீ மூலம் பிரஜா ஸபையில்,

## திருவிதாங்கூர் திவானவர்கள் நிகழ்த்திய முன்னுரை.

## இருபத்து நான்காவது கூட்டம்-1103.

1928-ம௵ பெப்ருவரி௴ 27உ, திங்கட்கிழமை.

கனவான்களே,

உங்களுக்கு நல்வரவு கூறவும் வெளிப் பிரதேசங்களின் தேவைகளை உங்கள் மூலமாக அறிந்து கொள்ளவும் எனக்கு மூன்றும் தடவையாக உரிமை அளித்திருக்கும் இன்றைய தினம் மாட்சிமை தங்கும் மஹாராணி ரீஜெண்டவர்களின் அருள் ததும்பிய ஆணையின்படி நாம் இங்கு கூடியுள்ளோம். 1102-ஆமாண்டத்திய ஆட்சி விவர அறிக்கைப் பத்திரம் இப்பொழுது உங்கள் கைவசமிருப்பதால், இந்த ஸமஸ்தானத்தின் பற்பல இலாகாக்களும் செய்துள்ள முயற்சிகள் இன்னின்னவையென்று அவ்வறிக்கையைக் கவனமாய்ப் படித்துப் பார்த்து நீங்களே தீர்மானித்துக் கொள்வீர்கள்என்பதில் எனக்கு ஐயமில்லை. நீங்கள் படித்துப் பார்க்கும்போது உங்களுக்குச் சிறிது உதவியாயிருக்கலாமென்ற நம்பிக்கையுடன், அவ்வறிக்கைப் பத்திரத்தின் அத்தியாயங்களில் ருசிகரமானவையாக அல்லது முக்கியமானவையாக இருக்கக் கூடியவற்றை இப்பொழுது உங்களுக்கு எடுத்துக்காட்ட முயல்கிறேன். ஆயினும், அவ்வாறு செய்யப்புகுமுன், சென்ற ஆண்டத்திய பிரஜா ஸபையின் நடவடிக்கைகளைப்பற்றிச் சுருக்கமான ஒரு அபிப்பிராயம் சொல்லிக்கொள்ளட்டும். கடந்த இரண்டு கூட்டங்களில் நீங்கள் தெரிவித்துக்கொண்ட விஷயங்களின்மேல், சென்ற பன்னிரண்டு மாதங்களாக இன்னவெல்லாம் செய்திருக்கின்றன வென்பதைப்பற்றிய விவர அட்டவணை ஏற்கெனவே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இலாகாக்களின் தலைவர்களும் ஸெக்ரெட்டேரியற்றைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் உங்கள்



தேவைகளை நிறைவேற்றுவதற்கான வழிகளையும் உபாயங்களையும் கண்டுபிடிப்பதில் அக்கறையுடன் பெரிதும் உழைத்துள்ளார்கள். இயன்ற வழிகளெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பெற்றிருக்கிறது அல்லது எடுத்துக்கொள்ள முயற்சிசெய்யப் பெற்றுவருகிறது என்று அறிய அவ்வட்டவணையைக்கொண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்களென்று நான் உண்மையாய் நம்புகிறேன்; எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் தெரிவித்துக்கொள்ளும் விஷயங்களை ஒரு பிரதான ராஜ்ய காரியமாகக் கருதுவதில் மாட்சிமை தங்கும் மஹாராணி ரீஜெண்டவர்களின் கவெர்ண்மெண்டார் ஆழ்ந்த கருத்துடையவர்களாயிருக்கிறார்களென்பதை அதிலிருந்து நீங்கள் அறிந்துகொள்வீர்களென்றும் நான் நம்புகிறேன். ஒவ்வொரு அங்கத்தினரும் தெரிவித்துக்கொள்ளும் விஷயங்கள் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கியெடுத்த சில தேவைகளைமட்டும் சம்பந்தித்தவையாயிருக்கவும், அற்பமான காரியங்களை நிறைவேற்றுவது அந்தந்த இடத்து உத்தியோகஸ்தர்களுடையவும், இலாகாக்களின் தலைவர்களுடையவும் அதிகாரத்துக்குட்பட்டதாயிருந்தது. அந்தக் காரியங்களை இச்சபை முன்பாகக் கொண்டுவராமலிருக்கவும் நேர்ந்தால், உங்கள் நிவேதனங்களை ஓர் வகை செய்வது இலகுவாகும் நிறைவேற்றுவது செய்கைக்கு வரக்கூடியதாகவும் இருக்குமென்று, சென்ற ஆண்டத்திய நடவடிக்கைகளின் மத்தியில் சில அங்கத்தினர்களுக்குக் குறிப்பாய்க் காட்டினேன். நீங்கள் முன்னதாக அறிவித்திருக்கும் விஷயங்களைக் குறித்த ஜாபிதாவில் பெரியவையும் சிறியவையுமான, அநேகம் காரியங்கள் பயங்கரமான நிலைமையில் அணிவகுத்துக் காட்டப் பெற்றிப்பதாகத் தெரிகிறது. நீங்கள் விஷயங்களை எடுத்துரைக்கும்பொழுது, அவைகளிலிருந்து பகுத்தறிவுடன் தெரிந்தெடுத்துக் கொள்வீர்களென நம்பலாமா?

2. இனி, ஆட்சி விவர அறிக்கையைக் குறித்து நாம் பேசத் தொடங்குவோம். 1102-ஆமாண்டில் இயற்கையானது அன்புகூர்ந்திருந்ததைக் குறித்து நாம் மகிழ்வெய்த வேண்டியிருக்கிறது.

வருமானம்.

விவசாயம், வாணிபம், வர்த்தகம், பொதுஜனாரோக்கியம் முதலிய எல்லாத்துறைகளிலும் சென்ற ஆண்டு அனுகூலமாகவே இருந்தது. தன்னாண்டத்திய பொருள் நிலை செழிப்பான இந்நிலைமையைக் காட்டுகிறது. 1102-ஆமாண்டுக்குள் பட்ஜெட்டில் (வரவு செலவுத் திட்டக்கணக்கில்) சுமார் 215½-லட்சம் ரூபாய்க்கு மேல் ஒரு மொத்த வருமானம் மதிப்பிடப்பட்டது. ஆனால், அவ்வாண்டத்திய கணக்குகள் முடிக்கப் பெற்றபோது

238½-லட்சம் ரூபாய்வரை வருமானம் ஏறியிருப்பதாகத் தெரியவந்தது. இவ் வருமானப் பெருக்கத்தின் காரணம் அநுகூலமான நிலைமையில் எங்கும் செழிப்பான வளர்ச்சியும் முன்னிலும் அதிக சதமானமுள்ள பணவருவுமாகும்.

**செலவு.**

3. தன்னாண்டாரம்பிக்குமுன், சுமார் 208-லட்சம் ரூபாய்வரை நாம் செலவிட உத்தேசித்திருந்தோம். அவ் வாண்டத்திய கணக்குகளை முடிவு செய்தபொழுது, உண்மையில் செலவான தொகை 204-லட்சம் ரூபாய்க்கு மேல் 205-லட்சம் ரூபாய்க்கும் இடையிலுள்ள ஒரு தொகையாகக் காணப்பட்டது. இவ்வாறு தன்னாண்டில் ஏறக்குறைய 34-லட்சம் ரூபாய் மிகுதி ஏற்பட்டது; அதாவது முன்னாண்டத்திய மிகுதியை விட 11-லட்சம் ரூபாய் அதிகமாயிருந்தது. பேங்கில் பெருந்தொகை மீதியிருப்பது மதிக்கத்தக்கதும், நம்பிக்கையுண்டாக்கத் தக்கதுமாகும். ஆட்சி முன்னேற்றத்துக்குப் பெருந் தொகைகள் வேண்டிவரும்பொழுது அதற்காகச் சேமிக்கப்படும் நமது பணவருவாய்களைச் சிக்கனப் படுத்துவதைக் குறித்து யாரும் கேள்வி கேட்க இடமில்லை. தன்னாண்டில் எவ் வகையிலும் செலவைக் குறைப்பதற்கான யாதொரு தேவையும் அரசாங்கத்துக்கு ஏற்படாதது திருப்திகரமே.

**முதலும், கடனும்.**

4. தன்னாண்டத்திய கொடுக்கல் வாங்கல்களை மட்டும் பிரத்தியேகமாகவன்றிப் பொதுவாக, முதலும் கடனுமாகியவற்றின் விஷயமாயுள்ள ஸமஸ்தானத்தின் நிலைமையை அறிய நீங்கள் விருப்பமுடையவர்களாயிருப்பீர்களென்பதற்கு ஐயமில்லை. 1102-ஆமாண்டத்திய முதல் 297.29 லட்சம் ரூபாயும் கடன் 160.7 லட்சம் ரூமாயுமிருந்தன; ஆண்டிறுதியிலுள்ள மீதித் தொகையாகிய 136.59 லட்சம் ரூபாய், ஆடிட் டிபார்ட்மெண்டின் வசனமுறையில், ஸர்க்கார்க் கணக்காகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. முன்னாண்டிறுதியுள்ள மீதித் தொகை 103.37 லட்சம் ரூபாயாயிருந்தது. இதனால் ஸர்க்காரின் ஆதீனத்திலுள்ள மொத்த மூலதனம் 136.59 லட்சம் ரூபாய் மட்டுமேயாகும் என்று கருதவேண்டாம். 43.76 லட்சம் ரூபாய்வரை குறிப்பிட்ட காரியங்களுக்காக நீக்கி வைத்திருக்கும் ஸிங்கிங் பண்ட் என்னும் கடனழிப்பதற்கான நிதி இருக்கிறது; இதை ஒரு கடனாகக் காட்டியிருப்பினும், உண்மையில் இது பிரத்தியேக கடன்களைச்



செலுத்த உதவும் முதலாகவே அமைந்திருக்கிறது. இதுபோலவே 1102-ஆமாண்டிறுதியில் 60-லட்சம் ரூபாயாக கவர்ன்மெண்டினிடமிருந்த ஸேவிங்ஸ்பாங்கு டிப்பாஸிற்றுத் தொகையும் கவர்ன்மெண்டின் மேலுள்ள ஒரு கடனாக சரியாகக் காட்டப்பெற்றுள்ளது; அவர்கள் அதற்காக வட்டிகொடுக்கிறார்கள். 10-லட்சம் ரூபாய்க்கு மேல் பாங்குகளிலுள்ள பிக்ஸெட் டிப்பாஸிற்றுத் தொகையும், 165.33-லட்சம் ரூபாய் வரை முக விலையுள்ள இந்தியா கவர்ன்மெண்ட் பத்திரத்தின்படி வட்டிக்குப் போட்டிருக்குந் தொகையும் தன்னாண்டிறுதியில் முதலோடு சேர்க்கப் பெற்றன. கட்டடங்கள், நீர்ப்பாசன ஏற்பாடுகள், ரெயில் பாதைகள் ஆகியவற்றிற்காக நெடுங்காலத்துக்குச் செலவு செய்திருக்கும் பெருந் தொகைகள் அவ்வாறு காட்டியுள்ள மொத்த முதலில் உட்படவில்லையென்று நான் சொல்லிக் கொள்கிறேன். இவையெல்லாம் உடனே ஈடாக்கத்தக்கவையா யிராவிட்டாலும், இவற்றிற்கு ஒரு மூலதன விலையுண்டு.

**நிலம் இல்லாத வகுப்பினர்களுக்கு நிலங்கள்.**

5. நிலம் இல்லாத வகுப்பினர்களுக்குப் பதித்துக் கொடுத்த 3,511 ஏக்கர் நிலத்தில், 2,250 ஏக்கர் அதாவது 64 சதமானம் பெரும்பாலும் உண்மை உழவுத் தொழிலாளிகளான புலையர்கள் பெயரில் பதித்துக் கொடுக்கப்பட்டதென்று ஆட்சி விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இவ் வெளிய மக்கட்கு ஓர் இடையூறு நேர்ந்திருக்கிறது. இவர்களில் பெரும்பாலாரும் தாங்கள் உழும் நிலத்தில்தானே வசித்து வந்ததுமல்லாமல், எண்ணிறந்த தலைமுறைகளாக நிலச்சுவான்தார்களால் பாதுகாக்கப் பெற்றும் வந்தனர். சிறிது காலத்திற்குமுன் நடந்த சமுதாய சட்ட நிர்மாணங்களையொட்டிச் சொத்துப் பிரிவினை யேற்பாடு ஊர்ஜிதத்துக்கு வந்ததோடு, ஆஸ்திகளைப் பிரிக்க நேரிட்டது; இதனால், பாகிக்கப்பட்ட நிலங்களில் பெரும்பாலும், அநேக சங்கதிகளில் அவற்றின் சொந்தக்காரர்களுக்குப் புலைய உழவுத் தொழிலாளிகளை தங்கள் நிலத்தில் குடியிருக்கச் செய்து அவர்களைப் பாதுகாக்க இயலாதவாறு, அவ்வளவு சிறியவையாய் விட்டன. இதன் பயனாக இவர்களில் பெருந் தொகுதியார் குடியிருக்க வீடற்றுத் தற்காப்புச் செய்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. இவ் ஏழைகளான ஆனால் இன்றியமையாத, மக்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டியதாயிருக்கிறது. இங்ஙனம் கூறியதனால் நிலம் இல்லாத வகுப்புகளைச் சேர்ந்த ஏனைய சமுதாயங்கள் புறக்கணிக்கப் பெற்று வருகின்றன என்று

அல்ல இதன் பொருள். 15,892 ஏக்கர் நிலம் பாகித்துக் கொடுப்பதற்காகப் பிரத்தியேகப் படுத்திவைக்கப் பெற்றுள்ளது; தன்ளுண்டில் 511 ஏக்கர் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இது திருப்திகாமாயில்லை. இப்படியானால் நீக்கி வைத்துள்ள நிலம் முழுவதையும் பகிர்ந்து கொடுக்க முப்பது வருஷம் வேண்டிவரும். இதற்குள்ள பரிகாரம் இலகுவான தன்று. நிலம் பதிவு செய்வதை யொட்டிய சகல வேலை முறைகளும் சட்டப்படியும் விதிப்படியும் தற்போது நிலவரி இலாகாவைச் சேர்ந்தவையாயிருப்பதனாலும், உண்மையில் ஒரு நிலவரி உத்தியோகஸ்தருடைய அலுவல்களைச் செய்யாத எந்த உத்தியோகஸ்தருக்கும் இந்தக் காரியத்தை நன்று நடத்த இயலாதாகையாலும், நிலவரி இலாகாவைச் சேர்ந்த ஓர் உத்தியோகஸ்தரல்லாத பாதுகாப்பாளர் ஒருவர் அவசியமாகக் கஷ்டப்படுகிறார். நிலவரி உத்தியோகஸ்தர்கள் ஏற்கெனவே தங்கள் நேர முழுதும் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள். அடுத்த பொருளாதார வருஷ முதல் முன்னிலும் அதிக நன்மை பயக்கத்தக்க ஏற்பாடுகள் செய்ய அரசாங்கத்தார் உத்தேசிக்கிறார்கள். தாழ்த்தப்பெற்ற வகுப்பினர்களுக்கு முழு நேரமும் வேலைசெய்யும் பாதுகாப்பாளர் என்று கூறப்பட்டவரும் ஒருவருடைய நியமனத்தால் மட்டும் இந்தக் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய இயலாதென்று கவனமாய் ஆய்ந்தோய்ந்து பார்த்ததன் மேல் எனக்குப் புலனாயிற்று.

யுத்தத்தில் உழைத்தவர்களுக்கு நிலங்கள்.

6. யுத்தத்தில் உழைத்தவர்களுக்காக நீக்கி வைத்திருக்கும் 4,320 ஏக்கர் நிலத்துக்கும் அவர்களுக்கு உண்மையில் பதித்துக் கொடுத்திருக்கும் 19-ஏக்கர் மாத்திரமுள்ள நிலத்துக்கும் தம்முள் காணப்படும் அசாதாரணமான ஏற்றத் தாழ்வினால், இது விஷயமாய் அரசாங்கத்தாரின் உள்ளக் கிடக்கைகளை நிறைவேற்ற இயலாமற் போனதற்குள்ள காரணங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும்படி கட்டளையிட நேர்ந்தது. தப்பெண்ணமே இத்தவறுக்குள்ள பிரதான காரணமாயிருந்தது. யுத்தத்தில் உழைத்தவர்கள் தாங்கள் விண்ணப்பித்துக்கொண்ட நிலத்தின் தரைவிலையாவது கொள்விலை முழுவதாவது கொடுக்கவேண்டுமென்றும், அனுமதித்துள்ள ஸௌஜன்னியம் முற்பட்ட உரிமையுடையவர்களுக்கும் நிலங்கள் ஒதுக்கி வைப்பதற்கும் மட்டுமே பொருந்துமென்றுத் நிலவரி உத்தியோகஸ்தர்கள் எண்ணியிருந்தார்கள். இது சம்பந்தமான விதிகள் தெளிவாயிருக்கவில்லை. அதன் பிறகு அத்தப்பெண்ணம் அகற்றப்பெற்றது. நிலங்களை விலையின்றிப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று தெளிவாக்கியிருப்பதுமல்லாமல், பதித்துக் கொடுப்பதற்கான காலவரையறையை 1928-ஆம் வருஷம்



நவெம்பர் மாசம் 21-ஆம் தேதிவரை நீட்டியிருக்கின்றது. நிலம் பதித்துக் கொடுப்பதை துரிதப்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளும் இப்பொழுது செய்யப்பெற்றுவருகின்றன; ஆனால், விண்ணப்பங்களில் காணப்படும் பிழைகள் காரணமாகச் சில வேலைகளில் காலதாமதங்கள் விலக்க வொண்ணாதனவாய் ஏற்படுகின்றன. நீக்கிவைத்திருக்கும் நில விஸ்தீர்ணத்துக்கு வெளியிலுள்ள நிலங்களும், நிலத்தின் இருப்பிடத்தைக் குறித்துப் போதுமானபடி விவரமாய்த் தெரிவிக்கப் பெற்றிராத நிலங்களும், ஏற்கெனவே பிறருடைய சுவாதீனத்திலிருக்கும் நிலங்களும் விண்ணப்பிக்கப் பெறுகின்றன.

உப்பு.

7. இந்த ஸமஸ்தானத்தின் செலவுக்கு வேண்டிய உப்பு முழுவதையும் இந்த ஸமஸ்தானத்திலேயே விளைவிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆசையும், நோக்கமுமாகும். நமது சொந்த உப்பு விளைவு 407,466 மணங்குமட்டுமே யிருந்தமையால், 1101-ஆமாண்டில் பம்பாயிலிருந்து 310,234 மணங்கு உப்பும் தூத்துக்குடியிலிருந்து 586,504 மணங்கு உப்பும் இறக்குமதி செய்யவேண்டிவந்தது. 1102-ஆமாண்டில் நிலைமைகள் அபிவிருத்தி யுள்ளவையாயிருந்தன. நமது லைஸென்ஸ்பெற்ற பதினொன்கு உப்பளங்கள் 668,991 மணங்கு உப்பு விளைவித்தன: இது நாளிதுவரையுள்ள விளைவுகளில் மிகவும் அதிகமான விளைவு; இது முன்னையிலும் நல்ல உப்புநீரினுடையவும் மிகவும் தகுந்த பருவ நிலைமைகளுடையவும் பயனாய் ஏற்பட்டதாகும். பம்பாய் உப்பின் இறக்குமதி 2,30,539 மணங்காகவும் தூத்துக்குடி உப்பின் இறக்குமதி 3,22,594 மணங்காகவும் குறைந்தன. இவ்வாண்டில் இன்னும் அபிவிருத்தி செய்ய நாம் விரும்புகிறோம். சீப் எஞ்சினீரும் எக்ஸைஸ் கமிஷனரும் உப்பளங்களின் சொந்தக்காரர்களுடன் கலந்து யோசித்து உப்பு விளைவிக்கும் தொழிலை ஊக்குவதற்கான உபாயங்களை ஆராய்ந்து வருகின்றனர்.

அப்காரி.

8. ஆட்சி விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, ஸமஸ்தானத்தில் சாராயமும், கள்ளும் செலவாக்குங் காரியத்தில் அரசாங்கத்தார் கொண்டிருக்கும் நயத்தையும் அந்த நயத்தைப் பின்பற்றி 1102-ஆமாண்டில் செய்த ஏற்பாடுகளையும் நீங்கள் அவ்வறிக்கையில் கண்டுகொள்வீர்கள். அதுமுதல் மது விலக்கின் பொருட்டுப் பின்னும் முற்போக்கான வழியைக் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறது. அடுத்த இரண்டு வருஷத்துக்குத்தக்குள்ள கடைகளின் ஏல விற்பனையையும், மரங்களிலிருந்து கள்ளிறக்குவதற்கான லைஸென்ஸ்களை கொடுத்தலையும் சில மாதங்கட்குள்

தொடங்கவேண்டியிருக்கிறது. இவ்வேற்பாட்டை அனுவதிப்பதில் அரசாங்கத்தார்—கருப்பட்டிச் சாராயத்துக்குள்ள தீர்வையை ப்ரூப் காலன் ஒன்றுக்கு 4 ப்ரிடிஷ் ரூபாய் 8 அணாவிலிருந்து 4 பிரிடிஷ் ரூபாய் 12 அணாவாகவும், கள்ளுச் சாராயத்துக்குள்ள தீர்வையை ப்ரூப் காலன் ஒன்றுக்கு 8 பிரிட்டிஷ் ரூபாய் 9 அணா 6 பையிலிருந்து 8 ப்ரிடிஷ் ரூபாய் 11 அணாவாகவும் உயர்த்தவும்; மதுபானக் கடைகளின் எண்ணை 1,835 லிருந்து 1,754 ஆகக் குறைக்கவும் வேண்டுமென்று தீர்மானித்துள்ளார்கள். ஆனால், ஒருவேளை, பிரதேசத்தாரின் விருப்பப்படி விடுவது என்பதாகச் சங்கனாச்சேரியில் நடத்தப்போகும் இரசகாமான பரீட்சண முறையாயிருக்கலாம். பொது ஜனங்கள்மிகப் பிரதானமாய்க் கருதுவது.

**பருவ காலமும் வர்த்தகமும்.**

9. வட கிழக்குப் பருவமழை சற்றுக் குறைந்ததனாலும் தென் மேற்குப் பருவமழை மிகவும் முன்னதாகத் தொடங்கினதனாலும் நெற்பயிருக்குச் சிறிதளவு தீங்கு ஏற்பட்டது. ஆனால், மொத்தத்தில் பருவகாலம் அனுகூலமாயிருந்தது; பிரத்தியேகமாய் தென்னை முதலிய தோட்டப் பயிர்களுக்கு அது அனுகூலமே. நிகழும் ஆண்டில் வட கிழக்குப் பருவமழை முன்னதாக நின்று விட்டபடியாலும், சிறிதமட்டில் மழை குறைந்தபடியாலும் தென் திருவிதாங்கூர் நெற் சாகுபடிக்குக் கேடு நிகழக் கூடியதாயிருக்கிறது. 1102-ஆமாண்டில் வாணிபமும், வர்த்தகமும் செழித்தன; வெளிநாடுகளோடுள்ள வர்த்தகத்தின் விலையில் ஒன்றரைக்கோடி ரூபாய் அதிகப்பட அது $17\frac{1}{2}$-கோடி ரூபாயாக உயர்ந்தது; இதில் நூற்றுக்கு 65 வீதம் ஏற்றுமதிக்குள்ளதும் நூற்றுக்கு 35 வீதம் இறக்குமதிக்குள்ளதுமாகும். வெளிநாடுகளோடுள்ள வர்த்தகத்தில் நூற்றுக்கு 32 வீதம் கடல் வழியாகவும், சுமார் நூற்றுக்கு 36 வீதம் காயல் வழியாகவும், சுமார் நூற்றுக்கு 32 வீதம் ரோடு வழியாகவும், சுமார், நூற்றுக்கு 10 வீதம் ரெயில்பாதை வழியாகவும் நடந்தன. இறக்குமதியானது ஜனத் தொகையில் நபரொன்றுக்கு 15.4 ப்ரிடிஷ் ரூபாய் வீதமும், ஏற்றுமதி 28.4 ப்ரிடிஷ் ரூபாய் வீதமும் ஆயின. வர்த்தகத்தின் நிலைமை இவ்வாறு நமக்குத் தெளிவாய் அனுகூலமாகவேயிருந்தது. திருப்திகரமான ஒரு விஷயமென்னவென்றால், இறக்குமதியான அரிசியினுடையவும் நெல்லினுடையவும் விலை 38 லட்சம் ரூபாயாகவும் அவற்றின் அளவு 21,000 டன்னுக்கு மேலாகவும் குறைந்ததே. இது இந்நாட்டில் ஏராளமான நெல் விளைகிறதென்பதைக் காட்டுவதால், எல்லாம் நன்மையே. சுமார் $2\frac{1}{3}$-கோடி ரூபாய் விலையுள்ள 25,215,064 ராத்தல் தேயிலை ஏற்றுமதியாயிற்று; அதற்கு வசூலான தீர்வை 3,78 லட்சம் ரூபாயாகும். இவற்றிற்கொப்பான முன்னாண்டத்திய புள்ளி விவரங்கள் 25,602,045 ராத்தலும்



3.92 ரூபாயுமாகும். 1926-ஆம் வருஷத்தில் திருவிதாங்கூரில் 54,100 ஏக்கருக்கு மேற்பட்டுத் தேயிலைச் சாகுபடியாய், 28,531,100 ராத்தல் தேயிலை எடுக்கப் பெற்றது. ஏக்கர் ஒன்றுக்குள்ள சராசரி விளைவு, ஆஸாமில் 575 ராத்தல் வீதமும் பெங்காலில் 503 ராத்தல் வீதமும் சென்னையில் 435 ராத்தல் வீதமும் கூர்க்கில் 333 ராத்தல் வீதமுமுள்ளவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது திருவிதாங்கூரில் 527 ராத்தல் வீதமாகிறது. 1102-ஆமாண்டில் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் விலையுள்ள 7,656,306 ராத்தல் ரப்பர் ஏற்றுமதியாயிற்று. முன்னாண்டைக்குள்ள இவற்றிற்கொப்பான புள்ளி விவரங்கள் 6,279,321 ராத்தலும் ஒருகோடி ரூபாய்க்குமேலாகும். 1926-ஆம் வருஷத்தில் 8,456,600 ராத்தல் விளைவுள்ள 43,600 ஏக்கர் திருவிதாங்கூரில் உண்டாயிருந்தது. ஏக்கர் ஒன்றுக்குள்ள சராசரி விளைவு, கொச்சியில் 218 ராத்தல் வீதமும், சென்னையில் 191 ராத்தல் வீதமும், கூர்க்கில் 155 ராத்தல் வீதமும், பர்மாவில் 139 ராத்தல் வீதமும், மைஸூரில் 83 ராத்தல் வீதமுமுள்ளவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, திருவிதாங்கூரில் 194 ராத்தல் வீதமாகிறது. இவையெல்லாம் பிரதான ஏற்றுமதி இனங்களாகும்; ஆனால், இவற்றிலெல்லாம் மிகவும் முக்கியமானது தென்னையாயிருந்தது; இதன் விளைவால் மொத்த ஏற்றுமதித் தீர்வையில் நூற்றுக்கு 53.5 வீதம் கிடைத்தது.

**துறைமுகங்கள்.**

10. நடைமுறையிலுள்ளவையாய் ஆலப்புழையிலும் கொல்லத்திலும், திருவனந்தபுரத்திலும், குளச்சலிலுமாக நான்கு கடல் துறை முகங்கள் நமக்கு உண்டென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. முதல் மூன்று துறைமுகங்களிலும் வந்துசேர்ந்த கப்பல்களும் கப்பல் பாரமும் அதிகரித்தன. ஆலப்புழை துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிகள் மிகவும் மும்முரமாய் நடந்தன. அடுத்த படியாகத் திருவனந்தபுரம் துறைமுகம், மூன்றாவது கொல்லமுமாகும். கொல்லத்தைக் குறித்து மிகவும் கவனிக்கற்பாலதான ஒரு விஷயமென்னவென்றால், கொல்லத்தில் வந்து சேர்ந்த நாட்டு மரக்கலங்களின் எண் முன்னாண்டிலுள்ளதை விட இரண்டு மடங்குக்கு மேற்பட்டிருந்ததே. மொத்தம் 351 நீராவிக் கப்பல்களும் 170 நாட்டு மரக்கலங்களும் துறைமுகங்களில் வந்து சேர்ந்தன. மொத்தமுள்ள கப்பற் பாரம் 873,853 டன் ஆயிருந்தது. ஆலப்புழையில் வந்து சேர்ந்த நீராவி கப்பல்களின் எண் 1101-ஆமாண்டில் 269-ஆயிருந்திருக்க, தன்னாண்டில் 307 ஆயிருக்

தது; கப்பற் பாரம் 623,772 லிருந்து 714,896 டன் வரை அதிகரித்தது. ஆலப்புழையில் கடல் மார்க்கமாய் நடந்த வர்த்தகத்தைக் குறித்துச் சமீபத்தில் பிறிதோரிடத்தில் வெளிவந்திருக்கும் சில விவரக் கணக்குகளை நீங்கள் கட்டாயம் பார்த்திருப்பீர்கள். ஆலப்புழையிலிருந்து ஏற்றுமதி செய்த சரக்குகளின் விலை சென்ற ஆறு வருஷங்களில் நூற்றுக்கு 197 வீதம் அதிகப்பட்டிருக்கிறதென்றும், இறக்குமதி செய்தவற்றின் விலை நூற்றுக்கு 116 வீதம் அதிகப்பட்டிருக்கிறதென்றும் மேற்படி கணக்குகளினின்றும் தெரியவருகிறது. ஏற்றுமதிகளின் விஷயத்தில் அதிகரிப்பானது வருஷா வருஷம் முன்னேற்றமுடையதாக விருந்திருக்கிறதென்று அந்தப் புள்ளி விவரங்களினின்றும் காணப்படுகிறது. இறக்குமதிகளின் விஷயத்தில் அந்தக் கால அளவில் ஏற்றத்தாழ்வு நேரிட்டிருக்கிறது. இந்தத் துறைமுகத்தில் வந்திறங்கின கப்பற் பாரத்தை யொட்டியுள்ள புள்ளி விவரங்களை நான் உங்களிடம் சொல்லுகிறேன். 1097 (1921-1922)ல் அது 310,535 டன் ஆயிருந்தது. அதன்பிறகு, 1102 (1926-1927)ல் 714,896 ஆவது வரை, அதாவது நூற்றுக்கு 130 வீதம் அதிகரிப்பது வரை வருஷா வருஷம் பெருகிக்கொண்டே வந்தது. இந்தப் புள்ளி விவரங்களை திருவிதாங்கூரின் பொதுவான வர்த்தக நிலைமையை யொட்டித் தொகுத்துப் பார்க்கவேண்டும். பிற நாட்டுடன் நடந்த வர்த்தகத்தின் மொத்த விலையானது-1096 (1920-21)ல் ஏறக்குறைய 11½ கோடி ரூபாயும், 1097-ல் 12.84 கோடி ரூபாயும், 1098-ல் 13.33 கோடி ரூபாயும், 1099-ல் 13.78 கோடி ரூபாயும், 1100-ல் 15.42 கோடி ரூபாயும், 1101-ல் 17.5 கோடி ரூபாயுமிருந்தது. கடல் மார்க்கமாய் நடந்த வர்த்தகத்தையும் மொத்தம் பிறநாடுகளில் நடத்திய வர்த்தகத்தையும் ஒப்பிட்டுள்ள சதமானம் 1096-ல் 12.8-ம், 1097-ல் 17.9-ம் 1098-ல் 20.3-ம் 1099-ல் 19-ம், 1100-ல் 21.8-ம், 1101-ல் 26.6-ம், 1102-ல் 32.02-ம் ஆகும். இவ்வாறு கடல் மார்க்கமாயுள்ள வர்த்தகத்துக்கும் வர்த்தகத்தின் மொத்தப் பரிமாணத்துக்கும் தம்முளுள்ள தாரதம்மிய விகிதம் வர்த்தக அபிவிருத்தியோடு கூடவே நிலவரமாய் அதிகரித்து வந்திருக்கிறது. திருவிதாங்கூரின் வர்த்தகத்தில், பிரத்தியேகமாய் ஏற்றுமதி வியாபாரத்தில், மதிக்கத்தக்க அளவு அபிவிருத்தி யேற்பட்டிருப்பதாக மேற்படி விவரக் கணக்குகளினின்றும் விளங்குகிறது. அதாவது, திருவிதாங்கூரானது சென்ற ஆறு வருஷங்களாக மென்மேலும் அதிகரித்து வரும் அளவுக்கு விளைவு உற்பத்திசெய்து வந்திருப்பதுமல்லாமல், நிலவரமாக அதிகரித்து வரும் அளவிலும், விளைவுண்டாகும் இடத்திற்குக் கப்பல்களை ஈர்ப்பதற்குச் சாதாரணமாய் எவ்வளவு வேண்டுமோ அதைவிட அதிகமான அளவிலும் தன் விளைவைப் பிறநாட்டு வியாபாரஸ்தலங்களுக்கு அனுப்பியும் வந்தது. இதில் மாயவித்தை யொன்றுமில்லை. இயற்கை வன்மையால் ஆலப்புழை வருஷ முழுதும் கப்பல் வந்தடைக்கும் ஓர் துறைமுகமாக மாறி



யிருப்பதுந் தவிர, அது மிகவும் செழிப்பான விளைவுப் பிரதேசங்களிலிருந்து வர்த்தகத்துக்குரிய பாதைகளும் போக்கு வாவுகளிலும் வந்து ஒரு நடுவிடத்தைக் கொண்டுமிருக்கிறது. வியாபாரிகளும் வர்த்தகர்களும் அங்கு பெருமிதமாக வந்து நிலையாகத் தொழில் நடத்திவருகிறார்கள்; மேலும், அவர்களுடைய தொழிலை நடத்துவதற்குள்ள வசதிகளுக்கு வேண்டிய அவர்களுடைய அவசரமான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அரசாங்கத்தார் முயற்சி செய்கின்றனர். உதாரணமாக, அவ்விடத்துக்கும் கொச்சிக்கும் டெலிபோன் போக்கு வரத்துக்கான ஏற்பாடு செய்திருக்கிறது; சீர்திருத்தம் பெற்ற டெரிக என்னும் பாரஞ் சாம்பிகள் கடற்கரைப் பாலத்தில் அமைக்கப் பெற்றுள்ளன; அதிகமான ட்ராலிகள் தருவித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன; கமேர்ஷியல் கால்வாய் சீர்திருத்தப் பெற்றுள்ளது; அதிகப் படியான பண்டக சாலைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றன. கொல்லத்துடன் இணைப்பதற்கான ரோடு பூர்த்தியாயிருக்கிறது; கொச்சிக்குள்ளே ஒரு ரோடும் பூர்த்தியாகுந் தறுவாயிலிருக்கிறது. வியாபாரமும், வர்த்தகமும் சம்பந்தமான தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பது தங்கள் கடமையென அரசாங்கத்தார் கருதுகின்றனர் ஆனால் ஆலப்புழையைச் சம்பந்தித்தமட்டில் பேராசை பிடித்த திட்டங்களில் கையிடும் எண்ணம் யாதொன்றும் அவர்களுக்கில்லை; ஏனெனில், ஆலப்புழையானது ஒரிறுதித் துறைமுகமாகாது, அதாவது கப்பல்கள் வந்துபோகும் ஓர் முறைமுகமேயன்றி வேறொன்று மாகாதென்று அவர்கள் நன்குணர்ந்துள்ளார்கள். ஏற்றுமதிகளுடையவும், இறக்குமதிகளுடையவும் பரிமாணங்கள் தம்முள் மிகவும் பெரிய ஏற்றத்தாழ்வு ஏற்படுகின்றது.

(தொடரும்)

# கிராமங்கள்.

1. தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தாற்
   சிறுகுறு மென்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே
   நண்ணினே னூர்ப்புற மடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
   களத்திலே திரிந்துற்ற விளைப்பை
யேட்டிலே யெழுத முடியுமோ விவைக
   ளெந்தைநீ யறிந்தது தானே.

*ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.*

2. கடவுள் கிராமங்களை உண்டாக்கினார்; மனிதன் பட்டினங்களை உண்டாக்கினான்.

*ஒரு பெரியார்.*

3. இயற்கைக்குத் திரும்புங்கள்.

*அடோல்ப் ஜஸ்ட்.*

4. கிராமங்களுக்குத் திருப்பிச் செல்லுங்கள்.

*மகம்மது அலி.*

5. இந்தியாவின் உயிர் கிராமங்களில் தானிருக்கிறது.

*ந.*

முப்பத்து மூன்று கோடி ஜனங்களடங்கிய பாரத கண்டமாகிய நமது இந்தியாவில் ஏராளமான ஜனங்கள் கிராமங்களில் வசித்து வந்தார்கள், வசித்து வருகிறார்கள். நம் தேசமானது லட்சக் கணக்கான கிராமங்களைக் கொண்டே அமைக்கப் பட்டிருந்தது, அமைக்கப் பட்டிருக்கிறது. முற் காலத்தில் கிராம காரியங்



களெல்லாம் மிக்க ஒழுங்குடன் நடக்கப்பட்டு வந்தன. தேவாலயங்கள், தர்ம ஸ்தாபனங்கள், வித்யாசாலைகள், குரு குலங்கள், விவசாயம், கைத் தொழில், வியாபாரம், போக்கு வரவு, பொது நிதி, பொது ஜன அமைதி, சுகாதாரம், வியவகாரம், அரசியல் முதலியவைகளைக் கவனிக்கும் பொருட்டு அறிஞர்கள் அடங்கிய பஞ்சாயத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஏற்படுத்தப் பட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விஷயமும் சரியான முறையில் நடத்தப்பட்டு வந்தது. பஞ்சாயங்கள் திறமையுடனும், ஒழுங்குடனும், நீதியுடனும் நடைபெற்று வந்தபடியால் அக் காலத்தில் தேசம் செழித்திருந்தது; சமாதானம் நிலவியிருந்தது; கல்வி பரவி யிருந்தது; கைத் தொழில் வளர்ந்திருந்தது: வியாபாரம் பெருகி யிருந்தது; ஆட்சி முறை நீதியுடன் நடந்து வந்தது. அரசர்களும், அறிஞர்களும், செல்வவான்களும் நகரங்களில் வசித்துக் கொண்டு வந்த போதிலும், கிராமங்களினிடத்துப் பிரத்தியேகக் கவனம் செலுத்தி வந்தார்கள். அக் காலத்திலிருந்த அரசர்கள் மாறு வேடம்தரித்துத் தங்கள் தேசங்களெல்லாம் சுற்றித் தேசத்தின் உண்மையான ஸ்திதியை நேரில் தெரிந்து கொண்டு, வேண்டும் சீர் திருத்தங்களைச் செய்து வருவது அரசர்களுடைய வழக்கமா யிருந்ததென்றால், தேச மக்களெல்லாம் அப்பொழுது இன்புற்று வாழ்ந்து வந்தார்களென்பதற்கு என்ன சந்தேகம்? "தனக்கென்று வாழாது, பிறர்க்காக வாழ வேண்டும்" என்ற தத்துவத்தின் உண்மையை யறிந்த உத்தம அரசர்களான ராமர், சிபி, சேர சோழபாண்டிய மன்னர் முதலியவர்களும், அவர்களின் வழி வழி வந்தவர்களும் மன்னுயிரைத் தன்னுயிர்போல் எண்ணி நீதியுடன் அரசாட்சி செலுத்தி வந்த அக் காலத்தில் தேசம் எல்லா வழிகளிலும் சிறப்புற்றிருந்தது மன்றி, ஜனங்களும் உயர்தர வாழ்வு வாழ்ந்து வந்தார்கள்.

இன்னும், சாதுக்கள் அப்பொழுது கிராமங் கிராமமாய்ச் சுற்றி, பஜனையுடன் பக்தியுண்டாக்கும் இனிய, அன்பு ததும்பும், அருமைப் பாடல்களைப் பாடி, ஜனங்களுக்கு மேலான எண்ணங்

களை உண்டாக்கிக் கொண்டு வந்தார்கள். துறவிகளுங்கூட கிராமங்களில் வசித்து, ஜனங்களுக்குத் தருமத்தைப் போதித்து வந்தார்கள். கிராமத்தார்கள் சந்நியாசிகளையும், சாதுக்களையும் அன்புடன் உபசரித்து, அவர்களுக்குத் தக்க ஆதரவு அளித்து வந்தார்கள். தென்னாட்டையே உய்விக்க வந்த மூர்த்திகளான நாயன்மார்களும், ஆழ்வார்களும் கிராமத்தார்களுக்கு என்ன எவ்விதம் போதித்தார்கள்? அவர்களை ஜனங்கள் எவ்விதம் நேசித்தார்கள்? பூசித்தார்கள்? என்பது எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். "என் சீடர்களே! கிராமங்களுக்குச் செல்லுங்கள், அங்கே ஜனங்களுக்குப் போதியுங்கள், அவர்களுடைய அன்பைப் பெற்று, அங்கு புசித்து, அன்று அங்கு தங்கி, அடுத்த நாட் காலையில் அடுத்த கிராமத்திற்குச் செல்லுங்கள்" என்று ஏசுநாதர் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. அன்றியும் அவர் போலவே ஜீவகாருண்யமே உருவாகக் கொண்ட புத்தபிரானும் தனது முதன்மை பெற்ற சிஷ்யராகிய ஆனந்தரிடம் கிராமங்களுக்குச் சென்று அன்பு மதமாகிய புத்த சமயத்தைப் போதித்துப் பௌத்த சங்கங்கள் ஏற்படுத்தும்படி கட்டளையிட்டாரென்று அவருடைய சரித்திரத்தின் மூலமாக அறிகிறோம். இன்னும், சீக்கியமத ஸ்தாபகரான குரு நானக் அவர்களும், முகம்மது நபிநாயகம் அவர்களும், வர்த்தமான மகா வீரர் அவர்களும் கிராமங்களின் பேரில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஆ! மதஸ்தாபகர்கள் கிராமங்களிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார்கள்! குரு குலங்களெல்லாம் நகரங்களுக்கருகே யில்லாது, மலைகளிலோ, மலை அடிவாரங்களிலோ, கிராமங்களிலோ, கோவில்களிலோ அல்லது அவைகளுக்குச் சமீபமாகவோ இருந்தனவாகையால், கிராம ஜனங்களுக்குக் கல்வி வசதிகள் அதிகமாக இருந்தன. கவி வாணர்களும், வித்வான்களும், அறிஞர்களும் கிராமங்கள் தோறும் சென்று, ஜனங்களுக்கு அறிவைப் புகட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டின் காவிய நூற்கள் வெகுவாய்க் கிராம வாழ்க்கையைப் பற்றியே விவரிக்கின்றன. போட்டியின்றிக் கைத் தொழில்களெல்லாம் விருத்தியாகிக்



கொண்டிருந்தன. கிராமங்களில் தர்ம வைத்திய சாலைகள் இருந்தனவாகையால், ஜனங்களுக்கு இலவசத்தில் வைத்திய வசதிகள் கிடைத்தன. நல்ல காற்றைச் சுவாசித்துத் தேக வேலைகள் நன்கு செய்தபடியால் கிராம ஜனங்கள் சுகவந்தர்களாக வாழ்ந்து வந்தார்கள். பண்டமாற்றுப் பரவியிருந்தபடியால் பரஸ்பர ஒற்றுமைப் பண்பு பரவியிருந்தது. கிராமத்தின் முற்காலத்திய ஒவ்வொரு விஷயத்தையும் விரிக்கிற் பெருகும்.

நாயன்மார்களிலும், ஆழ்வார்களிலும் முக்கியமாய் அநேகர்கள் எங்கே ஜனித்தார்கள்? கிராமங்களில். சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலிய மதாச்சாரியார்கள் எங்கே உற்பவித்தார்கள்? கிராமங்களில். சீக்கிய மதஸ்தாபகரான குரு நானக் எங்கே பிறந்தார்? கிராமத்தில். அன்பிற் சிறந்த ஆண்டாளும், அறம் வளர்த்த அம்மை மணிமேகலையும், பக்தி மிக்கக் காரைக்காலம்மையும் எங்கே தோன்றினார்கள்? கிராமங்களில். கண்ணன் விளையாடல்களை யெல்லாம் எங்கே கண்டுகழித்தார்கள்? கிராமங்களில். நம் நாட்டு வித்வ ரத்னங்கள், ஓவிய மணிகள், வைத்திய நிபுணர்கள், சிற்ப சாஸ்திரிகள், ஞானிகள் முதலியவர்களில் அநேகர்கள் எங்கே பிறந்தார்கள்? கிராமங்களில். உலக சரித்திரத்தைச் சற்று கவனிப்போம். கிருஸ்து நாதர், முகம்மது நபி முதலிய மதஸ்தாபகர்கள் எங்கே தோன்றினார்கள்? கிராமங்களில். ஆகையால் கிராமங்களின் பெருமை பெரிது பெரிது.

இந்தியாவின் மத்திய காலத்திலுங்கூடக் கிராம வாழ்க்கையானது சிறப்புற்றிருந்தது. அக்காலத்தில் நமது தேசத்திற்கு வந்திருந்த கிரேக்க தூதராகிய மகாஸ்தனிஸ் இந்தியாவின் பல பக்கங்களுக்கும் சென்று, பார்த்து இந்தியர்களுடைய நிர்வாகத்தை வியந்ததும் தவிர, கிராம பரிபாலனத்தைப் பற்றி மிகவும் புகழ்ந்து, தமது குறிப்புப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். கிராமப் பஞ்சாயத்துக்கள் இருந்ததாக முதலாவது ராஜ ராஜ சோழன் காலத்திய தஞ்சாவூர் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. மாக்ஸ் டங்கன், வில்சன், கோல்மன், டட்மில் போன்ற இந்திய சரித்திர

ஆராய்ச்சிக்காரர்களும், புராதன ஆராய்ச்சிக் காரர்களும் நமது நாட்டின் ஒப்பற்ற கிராம நிர்வாகத்தை வெகுவாகச் சிலாகித்து எழுதியிருக்கிறார்கள். "ஒவ்வொரு கிராம பரிபாலனமும் ஜனநாயக ஆட்சியைப் போன்று இருக்கின்றது. ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய விளை பொருள்களையும், உடை முதலியவைகளையும் தானே உண்டாக்கிக் கொள்கிறது. எத்தனையோ ராஜ வம்சங்கள் ஆண்டு அழிந்தன. எத்தனையோ புரட்சிகள் உண்டாயின. பதானியர்கள், மொகலாயர்கள், மகாராஷ்டிரர்கள், சீக்கியர்கள், பிரிடிஷ்காரர்கள் முதலிய எல்லோர்களும் இந்தியாவில் தலைமை ஸ்தானம் வகித்தார்கள், ஆனால் கிராமச் சமூகங்கள் அப்படியே இருக்கின்றன" என்று சர் சார்லஸ் மெட்காப் ஒரு அறிக்கையில் அறிவிக்கின்றார். "குக்கிராமங்களில் முக்கியமான தொழில் விவசாயமே. இருந்தபோதிலும் ஒவ்வொரு கிராமத்துக்கு வேண்டிய இன்றியமையாத வஸ்துக்கள் அக் கிராமத்திலேயே அகப்பட்டன. கிராமத்திலுள்ள ஆடு மாடுகளைப் பொது நிலத்தில் மேய்த்து வந்தார்கள். விறகு வேண்டியவர்களெல்லாம் காடுகளில் வெட்டிக் கொள்ளலாம். ஊர்ச் சபையார்களே ஊர் மேல் விசாரணையெல்லாம் கவனித்து வந்தார்கள். வாய்க்கால் வெட்டுவது, சாலை செப்பனிடுவது, பாலம் கட்டுவது முதலிய வேலைகளையெல்லாம் அவ்வூர்ச் சபையார்களே செய்து வந்தார்கள். ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடம் உண்டு. உயர்தரப் படிப்பு குரு குலத்தில் நிகழ்ந்தது" என்று ஸ்ரீமான் P. T. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவரது "இந்தியர் சரித்திரம்" என்றபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

இவ்வாறு கிராமங்கள் முற்காலத்திலும், மத்திய காலத்திலும் மிக்க உன்னத நிலை அடைந்திருந்தபோதிலும், இப்பொழுது கிராமங்கள் எந்நிலைமையிலிருக்கின்றனவென்று பார்ப்போம். அவைகளின் தற்கால ஸ்திதியைக் கவனித்தால், உள்ளம் வருந்துகிறது, கண்ணீர் வடிகிறது. இயந்திரங்களைக் கொண்டு தற்காலத்தில் அநேக தொழில்கள் நடைபெறுகிறபடியால் கிராமக் கைத் தொழில்களெல்லாம் சீர் குலைந்துவிட்டன. கைத் தொழிலாளிகள் அநேகர்கள் பட்டணங்களுக்குச் சென்று, தொழிற்சாலைகளில் மிகவும் சிரமத்துடன் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். நகரங்களில் செல்வம் பெருகினால் வியாபாரம் விருத்தியாவதால், அநேகர்கள் வியாபார ஸ்தலங்களுக்குச் சென்று அமருகிறார்கள். இன்னும் சிலர் சிறிய வியாபாரங்களில் பிரவேசிக்கிறார்கள். கூலி வேலைகள் கிடைக்காமல் திண்டாடும் கிராமவாசிகளும் நகரங்களையே நாடிச் செல்லுகின்றார்கள். கொஞ்சம் வாசித்தவர்கள் (ஆங்கிலம் கொஞ்சம் பேசவும், எழுதவும் கூடியவர்கள்) குமாஸ்தாக்களாகப் பல இடங்களுக்குச் செல்லுகின்றார்கள். கிராமங்களிலிருக்கும் பணக்காரர்களும் நகரத்தார்களின் ஆடம்பர வாழ்வில் மயங்கி அவர்களைப் போல் சுகங்களை சுகிக்கும் பொருட்டுப் பட்டணங்களுக்குச் செல்லுகின்றார்கள். இன்னும், சில கிராம ஜனங்கள் கங்காணிகளுடைய மோச வலையில் சிக்கி, மலைகளிலுள்ள தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்குக் கூலிவேலை செய்யச் செல்லுகின்றார்கள். இவ்வாறு கிராம ஜனங்களும் கிராம விளை பொருள்களும் நகரங்களுக்கும் இன்னும் அயல் நாடுகளுக்கும் சென்று விடவே, கிராமங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதுமன்றி, அவைகளின் பொருளாதாரம் மிகவும் கேடடைகிறது.



இங்ஙனம் கிராம வாழ்வு சிதைந்துவிட்டதின் பயனாக விவசாயம் நன்கு கவனிக்கப்படுவதில்லையாகையால், போதிய விளை பொருள்கள் உண்டாவதில்லை. கிராமங்களில் வறுமை வாட்டிக் கொண்டிருக்கிறது. கிராமங்களுங்கூடப் பலவித வரிச் சுமைகளால் நசுக்கப்படுகின்றனவென்று சொல்லாமலிருக்க முடியவில்லை. ஐயோ! உண்ணும் உணவிற்கே அலைந்து கொண்டிருக்கும் பொழுது, கல்விகற்கும் பொருட்டுக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு எவ்விதம் அனுப்ப முடியும்? கிராம ஜனங்களுக்குப் போதிய அளவு கல்வி வசதிகள் கிடைப்பதே கிடையாது. ஆகையால் கிராம வாசிகளில் பெரும்பான்மையோர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். வறுமையாலும், கல்வியின்மையாலும் கிராம ஜனங்கள் சுகாதாரத்தைக் கவனிக்க [illegible]

சுகாதார விதிகளை அனுஷ்டிக்க முடியவில்லை. ஆனதுபற்றி மலை ஜுரம், விஷ ஜுரம், நரம்புச் சிலந்தி, வாந்தி பேதி, பிளேக் முதலிய கொடிய வியாதிகள் அநேக கிராமங்களைத் தங்களுக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன. விஷ பேதி, பிளேக், வைசூரி முதலிய பயங்கரமான தொத்து வியாதிகள் அநேக கிராமங்களில் புகுந்து, அநேக உயிர்ச் சேதங்களை உண்டாக்கிக் கொண்டு வருகின்றன. கிராமங்களில் வைத்திய வசதிகள் கிடையாதாகையால், ஜனங்கள் அடையும் துன்பங்களுக்கு அளவு கிடையாது.

கிராமவாசிகள் தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றிச் சிதைத்துக் கொண்டார்கள். கிராமங்களில் மதுபானம் அதிகரித்துக்கொண்டு வருகின்றது; சண்டை சச்சரவுகள் பெருத்துக்கொண்டு வருகின்றன; சன்மார்க்கம் அழிந்துகொண்டு வருகின்றது; வறுமையாலும், கெட்ட பழக்க வழக்கங்களாலும், பொறாமை, பரஸ்பர அன்பின்மை, துவேஷம், வீண் மனஸ்தாபங்கள் முதலியவைகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. போலித் தலைவர்கள் பெருத்துக்கொண்டு வருகிறார்கள். கிராமவாசிகளிடம் ஒரு பெரும் குறை என்னவெனில், ஒற்றுமையின்மையே. பண்டைக் கிராம வாழ்க்கையின் உண்மை நிலைமை மாறிச் சுயநலம் அதிக்கிரமித்துக் காணப்படுகின்றது. அற்ப விஷயத்திற்குக் கொலைகளுங்கூட நடப்பதுண்டு. ஒரு கிராமத்தில் இருவருக்குள் மனஸ்தாபம் மேற்பட்டுவிட்டால், கிராமத்தையே பிரித்து இரண்டு கட்சிகள் உண்டாக்கி விடுகிறார்கள் சிலர். சில உண்மையாளர்கள், அன்பாளர்கள், சமரசம் விரும்புபவர்கள் முன்வந்து இக் கட்சிகளைச் சமரசப்படுத்த முயன்றால், அவர்களுக்குங்கூட உட்கேடு செய்து, அவர்களுடைய மனதைப் புண்படுத்தி, அவர்களையும் மௌனமாக இருக்கும்படி செய்து விடுகிறார்கள் சிலர். தேசாபிமானம் மிக்கவர்கள், தர்ம சேவகர்கள் கட்சிகளை நீக்கி ஒற்றுமையை வளர்க்க முயன்றால், கட்சித் தலைவர்களுக்கும், கிராமத்தையே பலவழிகளில் கெடுத்துக் கொண்டிருக்கும் போலித் தலைவர்களுக்கும் இவர்களைக் கண்டால் பிடிக்கிறதில்லை. இவர்களுக்கு இன்னும் பலவித இடையூறுகளை



யும் செய்கிறார்கள். “தர்மமே வெல்லுமெனும் சான்றோர் சொற் பொய்யாமோ?” பொய்யாகாதென்று நம்பித் தங்களுடைய கடமைகளை மட்டும் செய்துவிட்டுப் பேசாமலிருக்கிறார்கள் உண்மைத் தொண்டர்கள்.

கச்சேரிகளுக்குப்போய்க் கெட்டவர்கள், கெட்டுக் கொண்டிருக்கிறவர்கள் கிராமங்களில் அதிகமாயுண்டு. கச்சேரிகளுக்குச் சென்றவர்கள் தங்களைக் கோவணாண்டிகளாய்ச் செய்துவிடுவதுமன்றி, இன்னும் அநேகர்களைக் கெடுத்து விடுகிறார்கள். கச்சேரிகளில் சென்று கவனிப்போமானால், அநேகமாய்ப் பிராதுகளெல்லாம் கிராமங்களிலிருந்தே வந்திருக்கின்றனவென்று அறிந்து கொள்ளலாம். அநேக சிக்கனக்காரர்கள் கச்சேரி வியவகாரங்களுக்காகத் தாங்கள் பாடுபட்டுத் தேடிய அரும் பொருள்களையெல்லாம் தண்ணீர்போலச் செலவழித்துவிட்டுப் பின்பு திண்டாடுகிறார்கள். எத்தனையோ புராதனக் குடும்பங்கள், கௌரவக் குடும்பங்கள், செல்வக் குடும்பங்கள் கச்சேரி வியவகாரங்களினால் அழிந்தன. கச்சேரிகளுக்குச் செல்லுவதில் அச்சம், நாணம் உண்டாகவேண்டியதிருக்க, திருவிழாக்களுக்குச் செல்லுவது போல், கச்சேரிகளுக்குக் கூட்டங் கூட்டமாகச் செல்லுகின்றார்கள். கச்சேரிகளுக்குப் போய்க் கேசுகள் நடத்துபவர்களுக்குச் சிறிய குமஸ்தாக்களிடமும் வக்கீல்களிடமும் செல்வாக்கிருப்பதைக்காட்டிலும் அதிகமாகவே அறியாத ஏழைக் கிராமவாசிகளிடம் செல்வாக்குண்டு. இவர்களுக்கு “நடபடிக்கைக்காரர்கள்” என்று பட்டப் பெயர் உண்டு; பல பலமற்ற வழக்குகளுக்குங்கூடப் பலமும் உண்டாக்கி விடுவார்கள். இக் கிராம வக்கீல்களில் அநேகர் படித்துப் பட்டம்பெற்ற வக்கீல்களையும் யுக்தியில் மிஞ்சி விடுகிறார்கள். இவர்கள் பிராதுகள் ஜோடிக்கும் விதங்களும் சாட்சிகளைச் சரிக்கட்டித் தயாரிக்கும் வழிகளும் கிராமவாசிகளுக்குத் தெளிவாகத் தெரியுமாதலால் இங்கு சொல்லத் தேவையில்லை. இதைப்பற்றி விரிவாக எழுதுவதென்றால் இச்சிறு பத்திரிகையும் இடந்தாராது.

கூலிக்காரர்களுக்கு நிலச் சுவான்தாரர்களிடமிருந்து போதிய கூலி கிடையாது; தக்க பராமரிப்புக் கிடையாது; அவர்களுக்கு ஒருவித வசதியும் கிடையாதென்று திட்டமாய்ச் சொல்லலாம். கைத் தொழிலாளிகளோ அளவற்ற கஷ்ட நஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இயந்திரங்களுடன் போட்டி போட்டு வேலை செய்ய முடியவில்லை. 64 கலைகள் நம் பரத கண்டத்தில் சிறப்புற்றோங்கியிருந்ததென்று நாம் பெருமையுடன் கூறினாலும், சில தொழில்கள் தான் இப்பொழுது உயிருடனிருக்கின்றன. தப்பித் தவறியிருக்கும் அத்தொழில்களையும் நாம் இன்று போற்றி, விருத்தியாக்காமல் அவைகளையும் கவனியாது, தொழிலாளர்களையும் கேவலமாக நினைக்கிறோம். ஆகையால் கைத் தொழில்கள் விருத்தியடையவில்லை. தொழிலைத் தெய்வீகத் தன்மை பொருந்தியதெனப் போற்றுவதாலல்லவோ அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும், ஜப்பானியர்களும் செல்வந்தர்களாகச் சிறப்புடன் உலகம் மதிக்கும்படி வாழ்கிறார்கள். தொழிலாளர்களும், மேல்நாட்டு நாகரீகத்தில் அடிமைப்பட்டுக் "குமஸ்தாக்கள்" என்னும் சம்பளக்காரர்களாவதற்கு விரும்புகிறார்கள். நூதன நாகரீகம் இப்பொழுதுதான் கிராமத்தில் பரவ ஆரம்பித்திருக்கிறது.

நம் கிராம ஜனங்கள் இலங்கை, மலேயா, பிஜி, தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று, கூலிக்காரர்களாக வாழ்கிறார்களென்று எல்லோருக்கும் தெரியும். உலகிற்கெல்லாம் செல்வக் களஞ்சியம்போல் விளங்கிய நமது பரதகண்டத்தில் அநேகர்கள் பிழைப்புக்கு வழியின்றி, அன்னிய தேசங்களுக்குச் சென்று கூலி வேலை செய்வது எவ்வளவு கேவலம்! இவ்வுலகம் தோன்றிய கால முதல் நாகரீகத்தில் சிறப்புற்று வந்த நமது நாட்டார்களை நேற்று நாகரீகமடைந்த ஜாதியார்கள் அடிமைகளாக நடத்த இடம் கொடுப்பது எவ்வளவு கேவலம்! தர்ம நாடாம் நம்மிந்தியா, பொன் விளையும் நாடெனப் போற்றப்பெற்ற நம்மிந்தியா, அலெக்சாந்தர், கொலம்பஸ், வாஸ்கோடிகாமா, மார்க்கோ போலோ, அராபியர்கள், தார்த்தாரியர்கள், நாதர்ஷா,



15962

கஜினி முகம்மது, கோரி முகம்மது, முதலிய அயல் நாட்டார்களைத் தனது ஐஸ்வர்யத்தால் கவர்ச்சித்த இந்தியா இன்று கூலிக்காரர்கள் நாடென மற்ற தேசத்தார்கள் அழைக்கும் தேசமாகிவிட்டது. கேவலம்! கேவலம்!! சுமத்திரா, ஜாவா, பாலி, கம்போடியா, சம்பா, சயாம் முதலிய இன்னும் அநேக தேசங்களில் இந்தியர்கள் குடியேறினார்கள். "யாத்திரிகள், மாணவர்கள், செல்வம் படைத்த வீரர்கள், அயல் நாடுகளைப் பிடித்து அவைகளைத் தங்கள் ராஜ்யங்களுடன் சேர்க்கவேண்டுமென்ற ஆசை கொண்ட மன்னர்கள், இந்திய மாதர்களை மணம் புரிந்துகொண்டு சொந்த நாட்டிற்குச் சென்றவர்கள் ஆகிய இவர்களால்தான் அன்னியநாடுகளில் இந்திய செல்வாக்கு உயர்ந்து இந்திய நாகரீகம் பரவியது" என்று இந்திய சரித்திர ஆராய்ச்சியில் உயர்வு பெற்றவர்களில் ஒருவரான அறிஞர் யாதவநாத சர்க்கார் கூறுகிறார். இப்பொழுது அவ் விஷயம் அடியோடு அழிந்தது. இந்தியாவின் பண்டைப் பெருமைகளைக் காட்டுவதற்கு அந்நாடுகளில் இந்திய நாகரீகச் சின்னங்கள் இன்னும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

கிராமத்தைச் சம்பந்தப்பட்டவர்களில் இன்னும் ஒரு வகுப்பார்களிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி இப் பத்திரிகையில் சொல்ல இஷ்டமில்லை ஆனால் அவர்களைப்பற்றி எழுதாமலிருக்க முடியவில்லை. ஐயோ! அவர்களைப்பற்றி நினைத்தால், என் எழுதுகோல் நகரவில்லை. எழுதுவதற்கும் கை நடுங்குகிறது. என்ன எழுதுவதென்று தோன்றவில்லை. அவர்கள்தான் "ஒடுக்கப்பட்டவர்கள்". ஒவ்வொரு மனிதனையும் கடவுளாகக் கொண்ட புண்ணிய பூமியாகிய நம்மிந்தியாவில் சுமார் ஏழு கோடி ஜனங்கள் அடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். சில வகைகளில் மிருகங்களைக் காட்டிலும் அவர்கள் கேவலமாக நடத்தப் படுகிறார்கள். "என்று தணியும் எங்கள் துயரம்" என்று பெருமூச்சு விட்டுக் கண்ணீர் சொரிந்துகொண்டே தங்கள் கஷ்டங்களையெல்லாம் கடவுளிடம் ஒப்புவிக்கிறார்கள். "ஏழை அழுத கண்ணீர் கூரிய

வாழக்கும்'' என்ற இந்தப் பழமொழியை நாம் மறந்துவிட்டோம். ஒடுக்கப் பட்டவர்களை இவ்விதம் கொடுமையாக நடத்துவதைக்கண்டு, சகிக்காத கடவுளுடைய கோபத்தால் சாபத்தால்தான் இந்தியாவில் வறுமையும், பிணிகளும், அடிமை வாழ்வும் உண்டாகியிருக்கின்றனவென்று ஏன் சொல்லக்கூடாது? அவர்களுடைய நிலைமையைப் பற்றி ஒவ்வொருவருக்கும் நன்கு தெரியுமாகையால், நான் அதிகம் எழுதப் போவதில்லை.

என்று கிராமச் சமுதாய வாழ்க்கை அழிந்ததோ அன்றே நமது இந்தியா அழிந்தது, அழிந்தது என்று அறைகுவேன். பல படையெழுச்சிகளாலும், ஆட்சி முறைகளாலும், இன்னும் பல விதக் கேடுகளாலும் கிராமங்கள் சிதைந்து, குற்றுயிராகக் கிடக்கின்றன. சமீப காலத்தில் ஒரு அயல் நாட்டான் "இந்தியா செல்வீகம் பொருந்திய தேசம்" என்று சொல்ல, அதற்கு நம் தேசத்துப் பெரியார் ஒருவர் "கிராமங்களுக்குச் சென்று பாருங்கள்" என்று பதில் சொல்லியிருக்கிறார். ஒருவன் கிராமங்களுக்குச் சென்றால், முதலில் என்ன காண்பான்? அசுத்தமான வீதிகள், சீர்கெட்ட வீடுகள், தக்க போஷிப்பின்றி எலும்பும் தோலுடன் கூடிய வசீகரமற்ற குழந்தைகள், கவலைகளால் தாக்கப்பெற்ற சுறுசுறுப்பற்ற மனிதர்கள், நோயால் பீடிக்கப்பட்டவர்கள் வறுமையால் வாட்டப்பட்டக் குடியானவர்கள் அவனுக்குத் தோன்றும்.

கிராமங்கள் செவ்வையாகப் பரிபாலிக்கப் பட்டிருந்தால், கிராமங்கள் செழிப்புற்றிருக்கும். ஜனங்கள் சௌக்கியமாய், சந்தோஷமாய், சமாதானமாய், சுதந்திரத்துடன் வாழ்ந்து வந்திருப்பார்கள். வால்மீகி, தண்டி, பவபூதி, காளிதாஸ், கம்பன், புகழேந்தி, இளங்கோவடிகள் போன்ற கவி அரசர்கள், அருந்ததி, மைத்ரேயி, சாவித்திரி, சகுந்தலை, பாமதி, பாண்டிமாதேவி, மங்கையர்க்கரசி போன்ற மங்கை நல்லார்கள், கண்ணகி, சம்யுக்தா, சாந்தபீபி, தாராபாய், பத்மினி, ஜான்சி ராணி போன்ற வீர மாது சிரோன்மணிகள், சங்கரர், சைதன்யர், கௌதமர், நானக் போன்ற ஞான மூர்த்திகள், இன்னும் எத்



தனையோ வகை வகையான அறிஞர்கள், வல்லவர்கள் உற்பத்தியாகி நாட்டிற்கு அநேக நன்மைகள் செய்திருப்பார்கள். நாட்டில் சகல வளங்களும், சகல கலைகளும் விருத்தியாகியிருக்கும். சுருங்கச் சொன்னால், அன்று பாரத பூமி உலகத்திற்கே திலகமாயிருந்ததுபோல் இன்றும் திலகமாகவே இருந்திருக்கும்.

இப்பொழுது நகரத்தார்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? கிராம ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களை அறிவார்களா? அறியார்கள். அறியவும் இஷ்டப்பட மாட்டார்கள். கிராம வாசிகள் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்த போதிலும், எத்தனையோ இன்னல்களை அடைந்த போதிலும், சகிக்க முடியாத வரிகளால் கஷ்டப்பட்ட போதிலும் நகரத்தார்கள் என்ன, ஏன் என்று கவனிப்பார்களா? இல்லை, நொருக்காலுமில்லை. படித்த வகுப்பார்களும் நகரத்தார்களுமே அட்டைபோல இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதுபோல, கிராம ஜனங்களின் ஜீவசக்தியை இழுத்து, இன்பமனுபவிக்கிறார்கள். "நகரங்களே பெரிய திருடர்கள்" என்று ஒரு பெரியார் கூறுவது கவனிக்கத்தக்கதே. உண்மையாகக் கூறுமிடத்துக் கிராமங்களின் உதவியின்றி, நகரங்கள் ஒரு நாளேனும் நடத்துவது முடியவே முடியாது.

இந்தியாவில் ஏழரை லக்ஷம் கிராமங்களிலுள்ள ஜனங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் கஷ்டங்களை அனுபவிப்பார்கள்! "செல்வம் எத்தனையுண்டு புவிமீதே அவையாவும் படைத்த நாட்"டில் பிறந்த போதினும், நகரத்தார்கள் இன்ப வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கக் கிராமத்தார்கள் எவ்விதம் துன்ப வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்க முடியும்? கிராமவாசிகள் என்ன வேண்டுகிறார்கள்? உண்ண உணவும், உடுக்க ஆடையும், படுக்க இடமுமே வேண்டுகிறார்கள். அவர்களுடைய கடின உழைப்பால் இவைகளைக்கூட அடைய முடியாவிட்டால் அவர்களுடைய மனம் எவ்விதமிருக்கும்? யோசித்துப் பாருங்கள். டால்ஸ்டாய் என்னும் ருஷிய ஞானி நகரத்தை வெறுத்துக் கிராமத்திற்குச் சென்று, சாதாரண வாழ்க்கை சந்தோஷமுடன் வாழ்ந்து, உலகத்தார்களு

க்கு அதனைப் போதிக்கிறார். ஐரோப்பாவில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற குழப்பங்களுக்கெல்லாம் காரணம் கிராமவாசிகள் தங்களுடைய ஸ்திதியை உணர்ந்துகொண்டதுமன்றி, நகரத்தார்களுடைய கொடுமைகளையும் அறிந்துவிட்டார்கள். இக்காலத்தில் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் வாதம் நடந்து வருவதானது பிற்காலத்தில் முதலாளிகளுக்குக் கஷ்டம் ஏற்படக்கூடும் என்பதற்கு அறிகுறியேயாம். இவ் விஷயத்தைப் பற்றி ருஷியா உலகத்திற்கு எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறது.

கிராமவாசிகளே! கிராமத்தலைவர்களே! நீங்கள் நெடுங்காலமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காக நீங்களே பாடுபடவேண்டியிருக்கிறது. உங்கள் முன்னேற்றம் உங்கள் வசமே இருக்கிறது. கிராம வாழ்க்கையானது புராதன இந்தியாவிலிருந்தது போன்று உண்டாகவேண்டுமானால், கிராமங்கள் நூதன உயிர் பெற்றெழ வேண்டும். கல்வி, நடை, உடை, உணவு பாவனைகளில் உங்களுக்கும் நகரவாசிகளுக்கும் அதிக வித்யாசமிருக்கின்றது. நகரங்கள் மட்டும் அபிவிருத்தியடைந்து கிராமங்கள் மட்டும் முன்னேற்றமடையாமலிருந்தால் பிரயோஜனமில்லை. இந் நாட்டு ஜனத்தொகையில் 10ல் 9 பாகம் கிராமத்தவர்களே. கிராமவாசிகளின் உண்மையான உழைப்பால்தான் நாடு உயர் நிலையடைய வேண்டியிருக்கிறது. கிராமவாசிகளாகிய உங்களுக்குள் ஒற்றுமையும், தியாக புத்தியும், நம்பிக்கையும் சேவை செய்யும் எண்ணமும் இப்பொழுது குறைந்துகொண்டு வருகிறது. ஒற்றுமையின் பலத்தால் எல்லாவற்றையும் பெருக்குங்கள். கூட்டுறவு இயக்கத்தைக் கிராமங்களெங்கும் பரப்புங்கள். நவீன முறையில் விவசாயம் செய்யுங்கள். இந்தியா இயற்கையாகவே வளம் பெற்ற நாடு. டென்மார்க்கு சிறிய தேசம். அது கூட்டுறவின் மூலம் நூதன முறைகளை அனுசரித்துப் பற்பல நன்மைகளை அடைந்து கொண்டிருக்கிறது. அடுத்தியான அயர்லாண்டும் அப்படியே. நவம் நவமான வழிகளைப் பின்பற்றி விவ



சாயம், கைத் தொழில் முதலியவைகளில் முன்னுக்கு வருதல் வேண்டும். தேவாலயங்கள், தர்மஸ்தாபனங்கள், வித்யாசாலைகள், விவசாயம், கைத்தொழில், வியாபாரம், போக்கு வரவு, பொது நிதி, அரசியல், வியவகாரங்கள் முதலியவைகளைக் கவனிக்க, ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே சபை ஏற்படுத்துங்கள். அதிகாரத்தையும் ஆஸ்தியையும் கவனியாது, பொது ஜன சேவையில் ஈடுபட்டவர்களை, சத்திய சீலர்களை, தேசாபிமானிகளை, மதாபிமானிகளை, அறிஞர்களை இன்னும் அஞ்சா நெஞ்சு படைத்த நியாயவாதிகளை அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுத்து, அவரவர்களின் யோக்கியதைகளுக்குத் தக்க சபைகளில் சேர்த்து, ஒவ்வொரு காரியத்தையும் நன்கு நடத்துங்கள். ஆயிரம் தடவைகள் தவறினும் அதைரியப்படாதீர்கள். ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும், நம்பிக்கையுடன் மறுபடியும் மறுபடியும் வேலை செய்யுங்கள். இவ்வாறு முறையுடன் கிராம பரிபாலனம் நடைபெற்றால், கிராமங்கள் உடனே மேன்மையடைந்துவிடும். கிராம சீர்திருத்தங்கள் பேரில்தான் நமது இந்தியா உன்னதப்பதவி அடையவேண்டியிருக்கிறது. சொந்த விஷயங்களைப் பொதுக் காரியங்களில் கொண்டுவந்து புகுத்தாதீர்கள். குரோதம், பொறாமை, ஒற்றுமையின்மை முதலிய தீய குணங்களை உடனே ஒழித்து விடுங்கள். சாதிச்சண்டை சச்சரவுகளை அறவே நீக்குங்கள். ஒற்றுமையுடன் எப்பொழுதும் எக்காரியத்தையும் செய்யுங்கள். துன்பப்பட்ட உங்களுக்குச் சமீப காலத்தில் இன்பம் வருகிறதென்று அநேக அறிகுறிகள் காணப்படுகின்றன.

நகரவாசிகளே! சீமான்களே!! நீங்கள் கிராமவாசிகளின் உழைப்பால் உன்னதமாக வாழ்கின்றீர்கள். அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டு மாடுகள்போல் உழைத்தும் வறுமையினால் வாட்டப்படுவானேன்? ஆகையால் நீங்கள் அவர்களுடைய பரிதாபமான நிலைமையைக்கண்டு இரங்கி அவர்

களின் நன்மைகளுக்காக உடனே வேலை செய்யப் புறப்படுங்கள். உங்களிடத்தில் அவர்கள் வெறுப்புக் கொள்ளுமுன், அவர்களின் விருத்திக்காக உழைக்க முன் வாருங்கள். அவர்களுடைய சக்தியை அறியாது, இன்னும் உறங்கிக் கிடக்கும் அவர்களைத் தட்டியெழுப்பி அவர்களுக்கு வேண்டியவைகளைப் போதியுங்கள் செய்யுங்கள். நகரத்தார்களாகிய உங்களிடம் அவர்கள் விசேஷ மரியாதை வைத்திருக்கிறபடியால், அவர்கள் உங்களை இலகுவில் பின்பற்றுவார்கள். நீங்கள் உங்கள் நடை, உடை, பாவனைகளைத் திருத்திக்கொண்டால், அவர்களும் அவ்வாறே செய்வார்கள். நீங்கள் புராதனக் கொள்கைகளை அனுஷ்டியுங்கள்; அவர்களும் அவைகளை அனுஷ்டிப்பார்கள். "சாதாரண வாழ்வு, உயர்தர நோக்கம்" என்பதைக் கடைப்பிடித்து நடந்தால், அவர்களும் அவ்வாறு சாதாரணமாகவே வாழ்வார்கள்.

மிராசுதாரர்களே! உங்கள் பண்ணை ஆட்களின் எளிய நிலைமையைக் கவனிக்க முன் வாருங்கள். அவர்களுடைய சுக துக்கங்களை உங்களுடையவைகளாகப் பாவித்து, அவர்களின் பொருளாதாரம், சுகாதாரம், கல்வி முதலியவைகளை கவனித்துக் குறைகளைப் போக்கி, அவர்களிடம் கருணை காட்டுவீர்களேயானால், அவர்கள் ஊக்கத்துடன் வேலை செய்வார்கள்; உங்களிடம் அன்பு பூண்டு ஒழுகி, விசுவாசமாயிருப்பார்கள். அவர்களிடம் வறுமை ஒழிந்து, செல்வம் விருத்தியாகும்; நோய்கள் நீங்கி செள்க்கியத்துடன், சந்தோஷத்துடன் வாழ்வார்கள்; கல்வி பெருகும்; சமாதானம் நிலவும். ஆகையால் உங்களுடைய கடமைகளை இப்பொழுதே அவர்களுக்குச் செய்யப் புறப்படுங்கள்.

நமது துன்பத்திலும் இன்பத்திலும் சரிபங்குடைய நமது சகோதரிகள் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். கிராமங்களில் இவர்களின் நிலைமை பரிதாபம்! பரிதாபம்!! பெண்மணிகளுக்குக் கல்வி கொடாமல் அந்தகாரத்தில் அடைத்து வைத்திருந்தால், தேசம் முன்னேற்றம் அடைவதெப்படி? எத்தேசத்தில் பெண்களை மரியாதையுடன் நடத்துகின்றார்களோ



அத்தேசம் சீருடனும் சிறப்புடனும் இருக்கிறது. அநேக ஞானிகளையும் வீரர்களையும் பெற்றெடுத்த ஞானத் தாய்மார்கள் வழி வழி வந்த நமது அன்னைகளைச், சகோதரிகளை அடிமையாக வைத்திருப்பது கேவலம்! கேவலம்!! பட்சிகளும் மிருகங்களும் தத்தம் பெண்ணினங்களை எவ்வாறு காப்பாற்றிக் களிப்பிக்கின்றன. கவனிக்க! கவனிக்க!! இமாலயத்தில் சிவனும் கன்னியா குமரியில் சக்தியும் கோவில் கொண்டெழுந்தருளியிருப்பதின் தத்வம் கவனிக்கத்தக்கது. முற்காலத்தில் பெண்கள் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்டார்கள்.

பண்டை நாட்களில் நமது ஸ்திரீகள் கல்விகற்று வித்வாம்சினிகளாகவும் பண்டிதைகளாகவும் விளங்கி, தத்தம் புருஷர்களில்லாதபொழுது தங்கள் மக்களுக்கும் சிஷ்யர்களுக்கும் வித்தை போதித்து வந்தார்களென நாம் நூல்களின் மூலமாயறிகிறோம். மண்டனமிசிரருக்கும் சங்கரருக்கும் சாஸ்திரவாதம் நடந்தபொழுது நியாயத் தலைவியாக விளங்கியது மண்டன மிசிரரின் பாரியல்லவா? கார்க்கியும் சாவித்திரியும் அவர்களுடைய கல்விக்காகப் பேர்போனவர்களல்லவா? பிர்ம சூஸ்திரத்திற்கு வியாக்கியான மெழுதுகையில் பாமதி அவருடைய பர்த்தா வாசஸ்பதி மிஸ்ராருக்குக் கல்வியில் உதவிசெய்தபடியால், அந்நூலுக்கு பாமதி பாஷ்யம் என்று பெயரிடப்பட்டது. யாக்ஞவல்கியர் தனது பாரி மைத்திரேயிக்குத் தத்துவங்களின் மர்மங்களை வெளியிட்டார். கணித சாஸ்திரமும் தர்க்க சாஸ்திரமும் லீலாவதியால் எழுதப்பட்டன. மஹா பஜபதி அனுபவத்திலும், க்ஷேமா அறிவிலும், தம்ம தின்ன மதப் பிரசங்கத்திலும் பத்த கபிலனி பிரசங்கத்திலும் கீர்த்திபெற்று முற்காலத்தில் விளங்கினார்கள். மங்கையர்க்கரசியாரின் மாண்புகளும், காரைக்காலம்மையாரின் ஒழுக்கங்களும், பிறவித்துறவு பூண்ட திலகவதியாரின் இலக்கியங்களும், கோவலன் வயிற்றில் குல மகளாய்த் தோன்றி அறமகளாய் விளங்கிய அம்மை மணிமேகலையின் அறத்தின் மேன்மைகளும் மதன லீலையாரின் கல்வியின் ஆற்றல்களும், [illegible]

கல்வியின் திறனும், நாயனாரின் வாழ்க்கைத் துணைவி வாசுகி அம்மையாரின் ஒப்பற்ற குணாதிசயங்களும், ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிப் பின்பு அரங்கத்தில் அங்கர்பலித்த நாச்சியாரின்— ஆண்டாளின் அபார அன்பின் பெருமைகளும் "விரல் மங்கிரி மதியுடையாள் பெண்" என்று முழக்கிய ஔவை பிராட்டியாரின் பெரும் கல்வி ஞானத்தின் வெளிச்சமும் தமிழ் நாட்டாரால் நன்கு அறியப்பட்டவைகள். கிராமம் கிராமமாகச் சுற்றிப் பற்பல பாடல்களைப்பாடி கிராம ஜனங்களுக்கு அறிவு அளித்த அருந்தமிழ் ஔவையாரின் உயர் நூற்கள் மணிகளென அன்றும் இன்றும் போற்றப்படுகின்றன.

துர்க்காவதி அசுப் கானுடன் சண்டை நடத்தினார். சுல்தானா சந்த் ஆமதுநகரத்தைக் காப்பாற்றினார். ஜெஸ்வந்த ராவின் மனைவியான துளசிபாய் யானையின்மீது ஏறி மஹாராஷ்டிரக் குதிரைப் படையை நடத்தினார். ராணி சம்யுக்தா தன் புருஷனோடு போர்க்களத்துக்குச் சென்றார். தமிழகத்துக்கு வீரத்தாய்மார்களின் வீரமும் தீரமும் உலகம் போற்றக்கூடியது. இவைகளைப்போலவே இஸ்லாம் மாதரசிகளும் பெரும் வாய்மைப் பற்றுக்களையும் கொண்டிருந்தார்கள். இராஜ புத்திர வனிதா ரத்னங்களும் வீரத்திற் சிறந்தவர்களென்பது வெளிப்படை. இவைகளெல்லாம் நம் நாட்டுச் சரித்திரங்கள். இப்பொழுது இவைகளை அனுபவ முறையில் காண்பதரிதாகிவிட்டது.

பண்டைக்காலத்தில் வீர ஆண்மக்களது சன்மார்க்கத்திற்குப் பெண்மக்களே அஸ்திவாரமாக இருந்தார்கள்; அவர்கள் உலக சரித்திரத்தில் உயர்வான இடம் பெறும் பொருட்டுத் தொட்டிலிலேயே பழகினார்கள். மாதாவின் மடியே ஆரம்பக் கலாசாலை. மாதரசிகளின் நடப்படிக்கைகளும் ஒவ்வொரு சொல்லும் மக்களின் நல்லொழுக்கத்திற்குக் காரணமாயிருக்கின்றன. கல்வி முதலிய நாகரீகத்தைப் புகட்டுவது ஆண்களாகினும், ஆணுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் புகட்டப் பெண்களே தகுதி



யானவர்கள். நமது நாட்டில் மாதர்களெல்லாம் கற்றவர்களாயிருந்தால், அவர்களில் கணக்கற்ற அறிஞர்கள் தோன்றித் தேச நன்மைக்காகப் பல துறைகளிலும் முயற்சிப்பார்கள். நகர ஸ்திரீகள் ஆங்கில நடை உடை பாவனை முதலியவைகளில் விரும்பிக் கொண்டு வருவதையும், கிராமப் பெண்கள் அறிவிலிகளாகி வருவதையும் காண நாட்டுப் பற்றுடைய எவரும் மௌனமாக இருக்கமாட்டார்கள். நமது பெண்கள் அடிமைப் பட்டிருக்கும் வரையில் பாரததேசம் அடிமைப்பட்டதே என்பதை ஒவ்வொரு இந்தியரும் உணரல் வேண்டும். கிராம முன்னேற்ற வேலையில் பெண்மணிகளுக்கும் அதிகம் பங்குண்டு என்பதை ஒவ்வொரு இந்தியனும் அறிதல் வேண்டும். சில அயல்நாடுகளில் இவர்களைப் பற்றிக் கவனிப்போம். ஜெர்மனியில் சட்டசபையில் பெண்கள் புகுந்து 37 பேருக்கு மேலாக அங்கம் வகித்து வேலை செய்கிறார்கள். துருக்கியில் பெண்கள் முக்காடுகளை ஒழித்துப் பலவித பொது விஷயங்களில் ஈடுபட்டு உழைக்கின்றார்கள். எகிப்திய மாதரசிகளும் பல பாத்தியங்களைக் கொண்டு நாட்டின் நலன்களுக்காக உழைத்து வருகிறார்கள். இந்தியா இதை என்றுதான் கவனிக்குமோ? இங்கும் மாதர் இயக்கம் நத்தை மாதிரி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இச்சிறு வியாசத்தில் அதிகமாகச் சொல்லிவிட்டேனென்று நினைக்கிறேன். ஆயினும் நமது தேச வாலிபர்களுக்கு மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். என் பிரிய வாலிபர்களே! இந்தியாவின் செல்வங்களெல்லாம் சிதைந்தன; கலைகளெல்லாம் அழிந்தன. மீதமென்ன இருக்கிறது? சீரையும், சிறப்பையும் சுதந்திரத்தையும் இழந்து விளங்கும் இந்தியாவிற்கு நீங்கள்தான் செல்வ மணிகளாக விளங்குகிறீர்கள். நம் தேசத்திலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு யார் முதலாவதாக முன் வரவேண்டும்? என்று என்னைக் கேட்டால், வாலிபர்கள் என்று பதில் சொல்லுவேன். இரண்டாவது? வாலிபர்கள். மூன்றாவது? வாலிபர்கள் என்றே

மறுபடியும் பதில் கூறுவேன். நம் தேசத்தில் 33 கோடி ஜனங்களில் ஒருவேளை உணவு உட்கொண்டு மறுவேளை ஆகாரத்திற்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சுமார் பத்துக்கோடி ஏழை மக்களின் துன்பங்களை யெல்லாம் தீர்க்கவேண்டியவர்கள் நீங்களே. தேசத்தில் நூதன உணர்ச்சி உண்டாக்கக் கூடியவர்கள் நீங்களே. சாதியெனும் படுகுழியில் பாய்ந்து மதமென்னும் மமதைக்காளாகாது, சாஸ்திரச் சண்டை, கோத்திரச் சண்டை, மசூதி முன்மேளச் சண்டை, பசுவதைச் சண்டை முதலிய சில்லரை விஷயங்களில் ஈடுபடாது, சர்வ சமய சன்மார்க்கம் நிரம்பினவர்களாய்ச் சகோதர உணர்வுகொண்டு, தேசாபிமானமென்னும் இன்ப சாகரத்தில் மூழ்கி, நாட்டிற்கும் சமயத்திற்கும் மொழிக்கும் உறுதியுடன் உழைக்கக் கூடியவர்கள் நீங்களே. உங்கள் உண்மையான உழைப்பால் இந்தியாவிற்கு விடுதலையளிக்கக் கூடியவர்கள் நீங்களே. வாலிபர்களில் 100 க்கு 90 பேர்களுக்கு மேல் கிராமங்களில் வசிப்பதால், நாட்டின் நலத்திற்காகத் தீவிரமாக உழைக்கத் தகுதியுள்ளவர்கள் இளம் இந்தியர்களாகிய நீங்களே.

இராஜ போகங்களையும் தனது உயிரினும் இனிய மனைவியையும் இளமையில் துறந்து, சர்வ சங்கப் பரித்தியாகம் செய்துவிட்டு உலகில் ஜீவகாருண்ய நலம் செழித்தோங்க உழைத்தார் சாக்கிய சிம்ஹனர். அன்பு மதத்தை ஸ்தாபித்து, சுவிசேஷ வேலைக்காகவே தனது ஜீவியத்தை அர்ப்பணம் செய்தார் இயேசுநாதர். ஞான சுந்தரரும் நாவுக்கரசரும் யௌவனர்களே. வீர பத்தினியான கண்ணகியாரும் திலகவதியாரும் அப்படியே. கிருஷ்ணனது பிரேமையில் ஈடுபட்டு யௌவனத்தில் உலக இன்பங்களைத் தியாகம் செய்தார் சைதன்யர்.

தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோகன்ராய், கேசவ சந்திர சேனர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், ராம தீர்த்தர், பிரமானந்த பாரதி முதலிய நூதன இந்தியாவின் மதாபிமானிகள் ஆவேஷம் உங்களுக்குண்டாகிக் கொதித்துக் கொண்டி



ருக்கவில்லையா! தாதாபாய், திலகர், கோகலே, தாஸ், அஜ்மல்கான், அலி சகோதரர்கள், லஜபதி, சரோஜினி தேவி, மகாத்மா முதலிய தேச பக்தர்களின் ஆவேஷம் உங்கள் நரம்புகளில் மின்சாரம் போன்று பாய்ந்து உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா? ஒரு தேசமோ சமூகமோ உயர்வுக்கும் தாழ்வுக்கும் அத் தேச வாலிபர்களே காரணம். ஆதி காலத்தில் நமது தேசத்தில் வாலிப உணர்ச்சி மிகப் பரவி யிருந்தது. ஒவ்வொரு தேசத்தின் சுதந்தரப் போரில் இயற்கை யாசியின் சக்தியால் வாலிபர்கள் ஏற்ற காலத்தில் ஈடுபட்டு வேலை செய்தார்கள். பாரத யுத்தத்தில் தரும யுத்த வெற்றிக்காக தனது உயிரை அரவான் அர்ப்பணம் செய்தான். இதைப்போன்ற பல உதாரணங்கள் உண்டு.

ஐரோப்பிய தேசங்களை நடுங்கும்படி செய்து, பிரன்ச் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தது வாலிபராகிய நெப்போலியனே. மாஜினி, கரிபால்டி முதலிய இத்தாலியத் தேசாபிமானிகளைத் தாங்கி நின்று இத்தாலியில் கிளர்ச்சி செய்தவர்கள் அந் நாட்டு வாலிப மக்களே. நமது இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒத்துழையாமைக் காலத்தில் சிறைக்கூடம் சென்று தியாகம் செய்தவர்களில் அதிகமானவர்கள் வாலிபர்களே. சைனாவின் சுதந்திரப் போரில் ஐக்கியப்பட்டு உழைத்தார் வாலிபர் சென்யாட்சென். அயர்லாண்டு சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில்நின்று வேலைசெய்த இளம் ஐரிஷ்காரரின் உதவிகளைக் கொண்டே வெற்றி பெற்றார் டிவலரா. எகிப்திய ராஜீய சுதந்தரக் கிளர்ச்சியில் வாலிபர்கள் முன் வந்து தலைவர் ஜக்லுல் பாஷாவிற்குப் பேருதவி பலவும் அளித்துப் பல தியாகங்களைச் செய்தார்கள். அங்கோரா கவர்ன்மெண்டை ஸ்தாபிப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சாவுக்கு உதவியாயிருந்தவர்கள் இளந்துருக்கியர்களே! ஜெர்மனியின் சீர்கேடான ஆட்சி முறையை ஒழிப்பதற்குத் திறமையாகப் போராடியவர்கள் ஜெர்மானிய வாலிபர்களே.

உலகத்தின் அரிய பெரிய காரியங்களெல்லாம் யாரால் செய்யப்பட்டன என்று கேட்டால், உலக சரித்திரம் வாலிபர்கள், வாலிபர்கள் என்று பதிலளிக்கிறது. நீங்கள் ஆவேஷத்துடன் நிமிர்ந்து நின்றால், இந்தியாவின் கஷ்டங்களெல்லாம் சூரியனைக்

கண்ட பனி போல் உடனே ஓடிப்போய்விடும். கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு ஞான இந்தியா, தரும இந்தியா, செல்வ இந்தியா, நவ இந்தியா உங்கள் தியாகத்தால்தான் கட்டப்பட வேண்டும். மாறுதல் உண்டாவது உலக இயற்கையாயிருக்கிறது. இந்தியா மாறுதலடையும் காலம் வந்துவிட்டது "இந்தப் பொன் போன்ற சமயத்தை நன்றாய் உடனே உபயோகித்து, தேசத்தை உங்களிஷ்டம்போல் மேன்மையாகச் செய்து கொள்ளுங்கள்" என்று சந்தர்ப்பம் உங்களைக் கூவி அழைப்பதைக் கேளுங்கள்! கேளுங்கள்!! தர்ம சேவகர்களே; உங்கள் வாழ்க்கைகளையெல்லாம் அர்ப்பணம் செய்து, ஒற்றுமையுடன், தைரியத்துடன் உழைத்து இந்தியாவை உலகத்தின் மகுடமணியாகச் செய்வது உங்கள் கடமை யென்று கருதுங்கள்.

நமது பாதகண்டத்தில் 7½ லட்சம் கிராமங்களுக்கு மேலிருக்கின்றன. நமது சென்னை ராஜதானியில் மட்டும் கிட்டத்தட்ட 40,850 கிராமங்கள் உண்டு. தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 25,000 கிராமங்கள் இருக்கின்றன. கிராமங்களைக் கொண்டே நம் நாடு ஆக்கப்பட்டிருப்பதால், கிராம நிர்மாணமே தேச நிர்மாணமாகும். இந்தக் கிராமங்களெல்லாம் அபிவிருத்தி யடையாமல், பட்டினங்களெல்லாம் முன்னேற்ற மடையாது. நகர அபிவிருத்தியாலும், நாகரீகத்தாலும் நாடு உண்மையாகவே ஒருக்காலும் உயர்வடைய மாட்டாது! ஆகையால் நகரவாசிகளும், கிராமவாசிகளும் சிறியோரும் பெரியோரும், உத்தியோகஸ்தரும் உத்தியோக மற்றோரும், கற்றோரும் கல்லாரும், எல்லோரும் கிராமத் தொண்டு விடுபட்டு வேலை செய்ய உடனே தயாராக வேண்டும். கிராமங்களின் தன்மைகளை நன்கு அறிந்து தேசாபிமானிகளும், பொது நலத் தொண்டர்களும் தீவிரமாக வேலை செய்ய உடனே புறப்பட வேண்டும். கிராம சேவைக்கு என்ன வேண்டும்?

அனுதாபம், உழைப்பு, உறுதி, தியாகம்

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---



குறிப்பு:—

ஆசிரியர் நடத்திவந்த ஒரு சமூகப் பத்திரிகையில் "கிராமங்கள்" என்ற கட்டுரை வெளிவந்தவுடன் தமிழ் நாட்டில் பல பத்திரிகைகள் இதை வெளியிட்டன. கால நிலைமையை நோக்கியும் இம் மாசிகையின் நோக்கங்களைத் தழுவியும் சிற்சில மாற்றங்களுடனும் சீர்திருத்தங்களுடனும் "கிராமங்கள்" என்ற வியாசம் இதில் வெளியிடப் பட்டிருக்கிறது.

---

## ஆசிரியர் குறிப்புகள்.

---

### ஸ்ரீ மூலம் பிரஜா சபை.

போடிநாயக்கனூர் ஜனாப் உசேன் கான் ராவுத்தரவர்கள் (தேவிகுளம் தாலுகா பிரஜா சபை மெம்பர்) அன்பான உதவியினால் இப்பொழுது திருவனந்தபுரத்தில் நடந்த ஸ்ரீ மூலம் பிரஜா சபைக்குப் போயிருந்தேன். இக்கூட்டம் பிப்ரவரி 27௳ திருவனந்தபுரம் விக்டோரியா ஜூபிளி மண்டபத்தில் கூடிற்று. திருவாங்கூர் ராஜரீக முக்கியமான விஷயங்களில் இதுவும் ஒன்று. ஆகையால் இதைப்பற்றி அடுத்த இதழில் சற்று விரிவாக எழுதப்படும். கனம் திவான் நடந்துகொண்ட முறைகளும் கொடுத்த பதில்களும் ஏல விவசாயிகள் அவசியம் அறியத்தக்கன. ஏல விவசாயிகளுக்குப் புதிதாகப் பூமிகள் பதிப்பித்துக்கொடுக்கும் விஷயத்தில் கனம் திவான் கொண்டிருக்கும் பான்மை அனுகூலமற்றது. தேவிகுளம் பிரதிநிதிக்கு அவர் அளித்த அதிகாரப் பதில் அருத்தமற்றது, பொருத்தமற்றது நியாயமற்றது.

டிலேயில் அஞ்சல் வசதி.

பிரிடிஷ் இந்தியாவில் தபால் ஏற்பட்டு வேலை செய்வது போன்று, திருவாங்கூர் சர்க்கார் குறைந்த விகிதத்தில் கட்டணம் ஏற்படுத்தி நடத்துகிறார்கள். அஞ்சல் ஆபீஸ்களுக்குச் சுற்றியி ருக்கும் தாவளங்களிலிருக்கும் ஏல விவசாயிகளுக்கு அஞ்சல் வழியாக வரும் கடிதங்கள் சரியாகப் பட்டுவாடாச் செய்யப்படுவ தில்லையாம். மலையாளிகள் சுதேசிகளாம், நாம் வந்தவர்களாம்— பரதேசிகளாம். என்ன? ஏன்? என்று கேட்பார் கிடையாது. தலைமைச் சங்கமோ தூங்குகிறது. இதை ஏன்? என்று ஏல விவசாயிகள் கேட்காமல் மௌனமாக இருக்கும்பொழுது, வெளி விஷயங்களையா கேட்கப் போகிறார்கள்! ஏல விவசாயி களில் உற்சாகமுள்ளவர்களேனும் இதைப்பற்றி ஊன்றிக் கவனி த்துத் திருவனந்தபுரத்திலிருக்கும் அஞ்சல் சூப்பிரண்டேக்கு எழுதுவார்களாக.

சங்கத்தைத் திருவாங்கூரில் ரிஜிஸ்டர் செய்தல்.

நமது சங்கத்தைச் சரியாய் மதிக்காமலும் சங்கத்தின் வேண்டுகோள்களை உல்லங்கனம் செய்துகொண்டும் வருகிறார்கள் திருவாங்கூர் சர்க்கார். காரணத்தைக் கேட்டால் 'திருவாங்கூரில் உங்கள் சங்கம் பதிவுசெய்யப் படவில்லை. உங்களுடையது பிரிட் டிஷ் எல்லைக்குள் இருக்கிறது' யென்று போலிக் காரணங்களைக் கூறி நமது வாயை மூடுகிறார்கள். இந்த உபத்திரவம் ஒழியத் திருவாங்கூர் எல்லையில் நமக்கு நடுவான ஓர் இடத்தில் ஹெட் ஆபீஸ் என்று ரிஜிஸ்டர் செய்துவிட்டு நமது காரியங்களை வழக் கம்போற் செய்வோமாக. தலைமைச் சங்கம் இதைக் கவனிக்குமா?

வைத்திய உத்தியோகஸ்தர்கள் உபத்திரவம்.

உத்தமபாளையம் தாலுகாவில் பிளேக் பரவியதால் தேவி குளத்தில் பிளேக்கால் 2,3 மரணங்கள் நேரிட்டிருப்பதை முன் னிட்டு மெட்டுகளிலெல்லாம் பிளேக் வியாதியைத் தடுக்கும்பொரு



ட்டு வைத்திய உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார் கள். இஞ்சினியரிங் இலாகாவைச் சேர்ந்த பார்ரட் (Parratt) என்பவரைத் தலைமையாகக் கொண்டு இத்தடுக்கும் வேலை நடக் கிறது. ஏல விவசாயிகளுக்கு இதனால் இடைஞ்சல்கள் பலவா குய்! தடுக்கும் முறை சரியானதே, போற்றற்குரியதே. இந்த இலாகாவில் எத்தனையோ அன்பாளர்கள் பூததயையில் மிக்கவர் கள் இருக்கிறார்கள். எல்லோருமல்ல; எல்லாவிடங்களிலுமல்ல. ஆனால் சில இடங்களில் சிலர் சட்டத்தை மட்டும் பிடித்துக்கொ ண்டு தொங்குகிறார்கள். இப்படியிருக்கும் சிலரில் சிலர் மூளையை மட்டும் நன்றாய் உபயோகப்படுத்துகிறார்கள். இத்தடுக்கும் வைத் திய உத்தியோகஸ்தர்களைச் சரியாய் நடக்கும்படி செய்வது ஏல விவசாயிகளின் ஒற்றுமையின் வேலையே.

சோதனை ஏலத் தோட்டம்.

திருவாங்கூர் கிருஷி இலாகா, ஏல விவசாயத்தின் பேரில் சரியாய்க் கவனம் செலுத்தவில்லையென்று ஏல விவசாயிகளுக் கெல்லாம் நன்கு தெரியும். பூப்பாறைப் பகுதியில் கூடம்பாறை எஸ்டேட்டின் அருகில் ஒரு சோதனைத் தோட்டத்தை கிருஷி இலாக்காக்காரர்கள் உண்டாக்கியிருந்தார்கள். சில வருடங்களுக் குப் பிறகு புத்தடித் தாவளத்தில் ஒரு தோட்டம் ஷை டிபார்ட் மெண்டுக்காரர்களால் உண்டாக்கப்பட்டது. மேற்படி சோதனை ஏலத் தோட்டங்களுக்கு விவசாய காலேஜில் வெறும் புஸ்தகப் படிப்பை மட்டும் முடித்துவிட்டு வெளியே வந்தவரும் ஏலக் கிரு ஷியில் அற்ப அனுபவமும் அடைந்திராத ஒருவர் ஷை தோட் டங்களுக்கு மானேஜராக ஏற்படுத்தப்பட்டார். அந்த உத்தி யோகத்தோடுகூடி அவர் ஏல மலைக்கு வருமுன் ஏலச் செடியைக் கண்ணால் கண்டிருப்பாரோவென்று சந்தேகிக்கவேண்டியிருக்கி றது. ஷை பரீக்ஷீகரத் தோட்டங்களின் வேலைகளைப்பற்றி எவ் வித அறிக்கையும் வெளியிடப்படவில்லையென்று அறியப்படுகிறது. லட்ச லட்சமாக வரிக் கொடுத்தும் நமக்குச் சர்க்கார் சாதித்த

தென்ன? இதைப்பற்றிச் சங்கம் கவனிக்குமா? மௌன விரதம் பூண்டிருக்கிறது. பெரிய ஏலத் தோட்டக்காரர்கள் சேர்ந்து சோதனைத் தோட்டம் ஒன்று ஏற்படுத்திப் பலவித ஜாதி ஏலச் செடிகளைப் பலவிதமாய்க் கிருஷி செய்து, நானாவித முறைகளைக் கையாண்டு அனுபவத்தில் அறிந்து நன்மை தீமைகளையும் ஏல விவசாயிகள் அனைவரும் அனுசரிக்க வேண்டிய அவசிய முறைகளைப் பற்றியும், அறிக்கள் அடிக்கடி வெளியிட்டால் மிகவும் பரோபகாரமாயிருக்கும். இதை எந்த விசால நோக்கமும் முன்பின் ஆழ்ந்த யோசனை உடைய கனவான்கள் செய்யப்போகிறார்களோ வென்று ஏல விவசாயிகள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சாந்தம்பாறையில் வைத்திய வசதி.**

மலேரியா முதலிய வியாதிகள் பரவக்கூடிய இடங்களாயிருந்தும் திடீரென்று அபாயங்கள் நேரக்கூடிய இடங்களாயிருந்தும் ஏல மலைகளில் சர்க்காரால் வைத்திய வசதிகள் சரியாய் அமைக்கப்பட்டிருக்கவில்லை. ஏல மலையில் அநேக விடங்களில் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அநேக தாவளங்களுள்ள பூப்பாறைப் பகுதியில் சாந்தம் பாறைக்கு வாரம் ஒரு முறை உடும்பஞ் சோலையிலிருந்து டாக்டர் ஒருவர் வந்து எட்டிப்பார்த்து விட்டுப் போய்விடுகிறார். இதனால் ஜனங்களுக்குப் போதிய நன்மை கிடையாது. ஸ்திரமாகச் சாந்தம் பாறையில் ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்துமாறு ஜனங்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும். இது விஷயமாகத் திருவனந்தபுரம் வைத்திய இலாகா பரிபாலன சபைக் காரியதரிசிக்கு (The Secretary, Administrative Board, Melical Dept, Trivandrum) பூப்பாறைப் பகுதி ஏல விவசாயிகள் எழுதுவார்களாக.

**உத்தமபாளையம் தாலூகா போர்டு.**

போர்டுப் பிரிவினைத் தீர்மானம் வருகையில் எதிர்த்தது மன்றிப் பெரியகுளம் வக்கீல் ஸ்ரீமான் சந்தானகிருஷ்ண நாயுடு



அவர்கள் ஜில்லாபோர்டுக்கு இது விஷயமாக ஒரு மறுப்புரையும் எழுதியனுப்பி யிருக்கிறார். ஒரு காலத்தில் சர் அப்துல் ரஹீமும் ஒரு மறுப்புரை எழுதினார்; சர் சங்கரன்நாயரும் ஒரு மறுப்புரை ஒரு விஷயமாக வரைந்தார். இவைகளை இந்தியா இன்றும் போற்றுகின்றது. இந்த வக்கீல் அவர்களுடையதுக்கும் அவ்வறிவாளிகளுடையதுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமா! சர்க்காருக்கும் போர்டுக்கும் அனாவசியமாகப் பணம் செலவாகுமேயென்று போர்டைப் பிரிக்கவேண்டாமென்கிறார். "ஆட்டுக்குட்டிக்கு வயிற்றுவலி என்று ஓநாய் அழுததாம்" என்று ஒரு கதை உண்டு.

**ராயல் கமிஷன்.**

தென்னாடெங்கும் கமிஷனுக்கு நல்ல வரவேற்புகள் நடந்தன! உசிலம்பட்டியில் மட்டும் கமிஷனுக்கு ஏற்ற வரவேற்புக் கிடைக்கவில்லை!!

## ஆசிரியர் திரட்டு.

மலையாளம் என்றும் நேபாளம் என்றும் இரண்டு வகை ஏலங்கள் மைசூர் சமஸ்தானத்தில் காணப்படுகின்றன. இவைகள் அதிகமாகக் கமுகந் தோப்புகளில் பயிர் செய்யப்படுகிறது. சிமோகா, காடூர், ஹாசன் முதலிய ஜில்லாக்களின் மலைகளில் பிரத்தியேகமான தோட்டங்களில் ஏலம் கிருஷிசெய்யப் படுகிறது. சிமோகா ஜில்லாவிலுள்ள அகம்பி போன்ற சில வனங்களில் மலையாள ஏலம் தானாகவே பயிராகிறது. இந்த மகசூலை எடுப்பதற்காக ஆண்டுதோறும் தனியாகவோ அல்லது காட்டுச் சிறு சரக்குகளோடோ குத்தகைக்கு விடப்படுகிறது. பழம் பழுத்திருக்கும் காலத்தில் அட்டைகள் அதிகமாயிருக்கிறபடியால் பழம் எடுப்பதற்குக் கஷ்டமாகவும் நஷ்டமாகவும் ஏற்படு

இறது. இருந்தாலும் அகம்பிக் காட்டிலிருந்து மட்டும் 8 அல்லது 10 மணங்கு கிடைக்கிறது. காடூர் ஜில்லாவிலுள்ள சில காடுகளிலும் மஞ்சராபாத் தாலூகாவிலுள்ள கப்பிலேனிக் காட்டிலும் மிக அதிகமான ஏலம் கிடைக்கிறது.

(மைசூர்க் காடுகளின் வருமானமுள்ள
விளைவுகளின் கைப் புஸ்தகம்.)

## சங்கக் குறிப்புகள்.

தலைமைச் சங்கம்.

போடிநாயக்கனூரில் தலைமைச் சங்கம் அப்படியே யிருக்கிறது. அசைவில்லை. நிர்வாகக் கூட்டம் ஒன்றுமில்லை. தலைச் சங்கத்திற்கு அடிக்கடி வியாதி வந்துகொண்டிருக்கிறது. எத்தனை தடவை மருந்துகள் கொடுப்பது, சஸ்திரங்கள் செய்வது! சில தலைவர்களுக்குள் பேதத்தால் சங்கத்தையே அடியோடு கீழே தள்ளுகிறார்கள். சங்கத்தின் தற்கால-நிலைமையை உள்ளபடி எழுத இஷ்டமில்லை. இன்னும் பொறுப்போம் பொறுப்போம், பொறுமை மலையினும் பெரிது, பலமுடையது.

## வர்த்தமானக் குறிப்புகள்.

கூர்த்தகோடி சங்கராச்சாரியாரால் நாசிக்கில் மிஸ் மில்லர் என்ற அமெரிக்க மாது இந்து மதத்தில் சேர்க்கப்பட்டு சர்மிஷ்டா தேவி என்று பெயரிடப்பட்டபின், மார்ச்மீ 17உ சனிக் கிழமை ஸ்ரீமதி சர்மிஷ்டா தேவிக்கும் மாஜி இந்தூர் மன்னர் சர். துக்கோஜி ராவுக்கும் மணம் நடைபெற்றது.



சென்னை அரசாங்கப் புதிய மந்திரிகளான S. முத்தையா முதலியாரும், சேதுரத்னம் ஐயரும் சென்ற வெள்ளியன்று தங்கள் பதவிகளை ஏற்றுக்கொண்டு சட்டசபைக் கூட்டத்திற்கு வந்தபொழுது சபையோர், வெட்கம் வெட்கம் என்றும், ராஜிநாமா செய்யுங்கள் என்றும், துரோகிகள் என்றும் முழங்கினார்கள்.

o o o o o

புதுச்சேரியில் ஒரு சிறிய பூகம்பம் நேர்ந்ததாம். ஆனால் ஆபத்து ஒன்றுமில்லை. ஸ்நானம் செய்து கொண்டிருந்தவர்கள் கீழே விழுந்துவிட்டார்களாம்.

o o o o o

பம்பாயில் ஒரு மண்ணெண்ணெய் டாங் வெடித்ததில் அதன் உச்சியில் வேலை செய்திருந்த எட்டுப்பேர்களைத் தூக்கியெறிந்து விட்டது.

o o o o o

சென்னை ஆண்டர்சன் வீதியில், ரம்ஜானை முன்னிட்டு அப்துல்லா சேட் வீட்டில் ஏழை முஸ்லிம்களுக்குத் துணி மணிகள் கொடுத்தார்கள். அப்பொழுது ஆயிரக் கணக்கான முஸ்லிம் ஏழைகள் கூடிப் பிச்சை வாங்கச் சென்றதில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்த நெருக்கத்தில் அகப்பட்டு எட்டு மாதர்களும் எட்டு வயதான பெண்ணும் அல்லாவின் திருவடியை அடைந்தார்கள். இருவர் வைத்தியசாலைக்குச் சென்றார்கள்.

o o o o o

அடுத்த சித்திரை மாதம் 18-ந் தேதிக்குச் சரியான ஏப்ரல் மாதம் 30-ந் தேதி அலகாபாத் என்ற பிரயாகை க்ஷேத்திரத்தில் கங்கா புஷ்கரம் வருகிறது.

o o o o o

வருஷந்தோறும் இங்கிலாந்திற்கு 5 கோடி பொன் பெறுமானமுள்ள தேக்கு மரங்கள் இறக்குமதியாகிறது.

o o o o o

1927-ம் வருஷக் கடைசி வரையில் கணக்கிட்டதில் சென்னை நகரில் மாத்திரம் சொந்த மோட்டார்கள் 10.645-ம் வாடகை மோட்டார்கள் 98-ம், மோட்டார் பஸ்கள் 551-ம் இருக்கின்றன; அவைகள் ஓடுவதால் சாலைகளைப் பழுதுபார்க்கச் சென்னைக் கார்ப்பொரேஷனுக்கு 7 லக்ஷம் ரூபாய் செலவாகிறது.

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் போகும் வழிநெடுக மாத்திரம் கடலில் 8 கோடி சவரன் பொன் பெறுமானமுள்ள தங்கமும் நகைகளும் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

o o o o o

லண்டனில் 29,652 ஏக்கர் விஸ்தீரணமுள்ள திறந்த வெளிகள், நந்தவனங்கள் முதலியவிருக்கின்றன.

o o o o o

அங்குள்ள பொது வாசகசாலை, காட்சிச்சாலை முதலியவைகளை நிர்வகிக்க மாத்திரம் 2, 64, 560 பொன் செலவிடுகிறார்கள்.

o o o o o

துருவங்களுக்கருகிலுள்ள பாதிரிகள், கோயில் கட்டுவதற்கு மரமோ அன்றி கல்லோ கிடைக்காமையால் ஸீல் என்னும் ஒரு வகை மிருகத்தின் எலும்புகளை உத்திரங்களாகப் போட்டு பனிக்கட்டி கொண்டே கோயிலைக் கட்டியிருக்கின்றனர். இவ்விதம் கட்டியுள்ள மாதா கோயிலொன்றை இன்றும் பிளாக் லீட் தீவில் காணலாம்.

o o o o o

பர்மாவில் அடிமை விடுதலையைப் பற்றி செய்ய வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து முடிந்தன. இவ் வருஷத்தில் 763 பேர் விடுதலை பெற்றார்கள். எவ்வித குழப்பங்களில்லாமலே உத்தியோகஸ்தர்கள் காரியங்களை நடத்தி வருகிறார்கள்.

o o o o o

பிரிட்டிஷ் சக்கரவர்த்தி வைத்திருக்கும் கத்தியே உலகத்திலுள்ள எல்லாவற்றையும விடச் சிறந்த வேலைப்பாடுள்ளதாகும். மேலும் அதிக விலை பெறுமானமுள்ளதும், அழகானதுமான வேறு கத்தியைக் காண முடியாது. நான்காம் ஜார்ஜ் அரசாண்ட காலத்தில் அக்கத்தியை 6,000 பொன் செலவில் செய்தார்கள்.

o o o o o

எல்லாவற்றையும் விட பெரிய எரிமலை காவாயில் சிலாயா என்ற விடத்திலிருக்கிறது. அதன் வாயின் குறுக்களவு மாத்திரம் 3 மைல்.

o o o o o

மலாய் நாட்டிலுள்ள சுதேசக் குழந்தையொன்று நாமகரணஞ் செய்த பிறகு நோயுற்று விடுமாகில் அக் குழந்தையை மற்றொரு குடும்பத்திற்கு சுவீகாரமாகக் கொடுத்து விடுவதோடு, வேறு பெயரையும் வைத்து விடுகிறார்கள்.

---

ஆவணக்காப்பக
சென்னை-600 008
159612

திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்றதுணைவன் எவன்?
ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது உழைப்பவன் எவன்?
ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி உரைப்பவன் எவன்?

# அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்.

குறைந்த விகிதம்! நிறைந்த இலாபம்!!
நல்ல இடம்! நாணயமான கனவான்கள்!!
உங்களுக்கு
அதிக இலாபம் அடைய ஆசையா!
உங்கள்
வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா?
உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள்
வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா!
பின் ஏன் தாமதிக்கிறீர்கள்!
உடனே "ஏல விவசாயி" யில்
விளம்பரம் செய்யுங்கள்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு | ,, ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"ஏல விவசாயி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, கோம்பை.

1913 வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900000 பங்குகளின் பேரில் 2700000 ரூ மூலதனம்.

1. ஏல-விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும், லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்து லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக்கனுப்பி வைக்கும் பாம்பை, கல்கத்தா, காரச்சி முதலிய துறை முகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், டில்லி, லாகூர், அம்ரிட்ஸார், அலகாபாத், கான்பூர், ஆக்ரா, ஆகரில், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜெண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்க புகழையுமடையும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரெக்டர்.

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிட்டெட்.)
கோம்பை, மதுரை ஜில்லா.

Edited and Published by R. Narayanaswami on behalf of The Travancore Cardamom planters' Association
Printed at ANANDA PRESS, Uthamapalayam